# கதிரவன்

Kathiravan கதிரவன்

கல்வி இலக்கிய கலைச் சஞ்சிகை – 9



## கண்ணகி இலக்கிய விழா – 2011

திருமா மணி நங்கை வந்தாள் – எங்கள்
தேசம் தழைத்திட வந்தாள்! வந்தாள்!!




உலகத் தமிழறிஞர்
பேராசிரியர் **கா.சிவத்தம்பி**

60/=

# சிவா மல்டி கொம்பிலெக்ஸ்

மட்/ புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக

பயிற்சிப் புத்தகங்கள், புலமைப்பரிசில் மாணவர்களுக்கான புதிய வெளியீடுகள், பாடசாலை உபகரணங்கள், பரிசுப் பொருட்கள், வாழ்த்தட்டைகள், தெளிவான போட்டோபிரதி, பெக்ஸ், ஸ்கேனிங், லெமினேட்டிங், கொம்பியூட்டர் பிரிண்டிங், Book வைண்டிங், E-mail & Internet CD & DVDMobitel, Dialog, Airtel, Reload.



**பிரதான வீதி, புதுக்குடியிருப்பு.**


**தொ.பே : 065-3641247 / 077-0452861**

**உரிமையாளர் :- P.சிவனேசராஜா**





# PNN



பிரதானவீதி, புதுக்குடியிருப்பு-EP, மட்டக்களப்பு.

# வெல்டிங் வேக் சொப்

அழகிய வடிவமைப்பில் தரமான கேற், கிறில், குட்
அனைத்திற்கும் நாடுங்கள்
தரமான வேலை தாமதமற்ற சேவை.

## PNN Welding Work Shop

**உரிமையாளர். மூ.நாதன் - 0772147038**

கதிரவன் கலைக்கழகம் (KAC) தோற்றம் 28.04.1976
பதிவு இல. வகிமா/கஅ/பண்/மட்/21/2000 தாபகர் சி.தங்கராசா

**"வாழும் தமிழ் வாழ்க"**

KAC

உலகத் தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்க உறுப்பிதழ்

# கதிரவன்

## கல்வி இலக்கிய கலைச் சஞ்சிகை

ஆடி - புரட்டாதி (2011)

## கதிர் - 09

பிரதம ஆசிரியர் : திரு.த.இன்பராசா (கதிரவன்)

**கதிரவன் கலைக்கழகம் நிர்வாகம் (2011)**

| | |
|---|---|
| தலைவர் : | திரு.த.இன்பராசா |
| உபதலைவர்: | திரு.த.தயாபரம் |
| செயலாளர்: | திரு.சி புவனேந்திரன் |
| உபசெயலாளர்: | திரு.ச.மதன் |
| பொருளாளர்: | திரு.ந.பிரேமக்குமார் |
| பிரிவுத் தலைவர்கள்: | |
| கதிரவன் நெனசெல | திரு.த.கோபாலகிருஸ்ணன் |
| கதிரவன் கல்வி நிலையம் | திரு.ப.சுதர்சன் |
| கதிரவன் வெளியீட்டகம் | திரு.செள.லோறன்ஸோ |
| கதிரவன் நூலகம் | திரு.சி.சுதேஸ்வரன் |
| கதிரவன் பாலர் பாடசாலை | செல்வி.ந.சறோஜினி |
| தொலைபேசி : | 0754265201<br>0654903006 |
| கணனி வடிவமைப்பு : | அ.ஜெயலக்ஷ்மி |


ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு.

"உண்மையாகக் கற்ற மனிதனின் தெளிவான அறிகுறிகளில் ஒன்று மற்றவர்களின் அபிப்பிராயங்களுக்கு மதிப்புக் கொடுப்பது ஆகும்."

## உள்ளே........

பக்கம்

✧ கதிரவன் பேசுகிறேன் 02

✧ **கவிக்கதிர்**
- ★ கவிஞன் 07
- ★ கோடரி 09
- ★ போதிமாதவப் புத்தர் 16
- ★ புரிந்துணர்வு 25

✧ **கட்டுரைக்கதிர்**
- ★ பேராசிரியர் கா.சிவத்தம்பி 03
- ★ முக்குல (முக்குவர்) அரசி.. 26
- ★ ஔவை 34

✧ **கதைக்கதிர்**
- ★ பொன்னாடை 08
- ★ அரிச்சந்திர மயான.... 10
- ★ தலையிடியும் காய்ச்சலும் 17
- ★ திரைக்குப்பின்னால் 32

✧ **செய்திக்கதிர்** 23

✧ **அறிவுக்கதிர்** 30

✧ **கதிரவன் வாசகர்** 36

✧ **புலமைக் கதிர்** 37

**தொடர்பு முகவரி**

கதிரவன் கல்வி இலக்கிய கலைச்சஞ்சிகை
கதிரவன் கலைக்கழகம்
புதுக்குடியிருப்பு - EP
மட்டக்களப்பு - இலங்கை



"அதிகாரத்தை வெல்வது இதயம், இதயத்தை வெல்வது பயம்"

# கதிரவன் பேசுகிறேன்!

## கண்ணகி இலக்கிய விழா - 2011



கிழக்கிலங்கை தெய்வீக வழிபாடுகளில் கண்ணகையம்மன் வழிபாடு பிரசித்திபெற்றது மக்களோடு பிண்ணிப் பிணைந்தது பயபக்தி உணர்வுகளுடன் வைகாசி மாதத்திலே கண்ணகையம்மனுக்கு சடங்கு நடத்துவது அனைவரும் அறிந்த விடயம். காவடியாட்டம், கரகாட்டம், வான வெடியோசை, பறைமேளஓசை, கூத்து இவைகளெல்லாம் கண்ணகையம்மன் சடங்கு காலங்களில் கண்குளிரக் காணும் நிகழ்வுகள். மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான கண்ணகையம்மனுக்கு நேர்த்திக்கடன்கள் வைத்து அதை செவ்வனே நிறைவேற்ற பக்தர்கள் சித்தம் கொண்டு செயற்படுவார்கள் ஒருவகையில் பஞ்சமாபாதகங்கள் குறைவதற்கு இவ்வாறான வழிபாட்டுச் சடங்குகள் உதவுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்க விடயம்.

2011யூன் 18ம் 19ம் திகதிகளில் மிகவும் அழகாகவும் அலங்காரமாகவும் மட்/மகாஜன கல்லூரி கலையரங்கில் "கண்ணகி இலக்கிய விழா" நடைபெற்றது. இலக்கிய ஆர்வலர்களும் கண்ணகியம்மன் பக்தர்களும் விழாவில் கலந்து கொண்டனர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அனைவரது உள்ளங்கிலும் இடம்பிடித்த இவ்விழாவின் பெருமை கண்ணகி இலக்கியங்களை வெளிப்படுத்திய திறமை கண்ணகி இலக்கிய விழாக் குழுவினைச்சாரும்.

கண்ணகி தொடர்பான இலக்கியங்களை அறிமுகம் செய்து பரவலாக்குதல், பண்டைய காலம் தொடக்கம் இன்றுவரை பயின்று வரும் கண்ணகி சம்மந்தமாக விளங்கும் கண்ணகி இலக்கியங்களை வெளிக்கொணர்தல் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் குறிப்பாக கிழக்கிலங்கையிலும் நிலவும் கண்ணகி நம்மிக்கைகளுக்கிடையிலான பொதுமைகளை ஆராய்தல் ஆகியவை கண்ணகி இலக்கிய விழாவின் பிரதான நோக்கங்களாக அமைந்தன.

கண்ணகி இலக்கியவிழா வெற்றிபெறுவதற்கும் சிறப்படைவதற்கும் பல கலை இலக்கிய ஆர்வலர்களின் அயராத முயற்சி காரணமாக அமைந்தாலும் "கண்ணகி" என்கின்ற நாமத்தில் வெளிப்படும் பயபக்தியே இவ்விழாவின் சிறப்புக்கு மிகமுக்கிய காரணம் என்பது வெளிப்படையான உண்மை. இந்நிகழ்வு வருடந்தோறும் நடைபெற அனைவரும் உதவ வேண்டும் என தாழ்மையான கோரிக்கையை விடுப்பதில் மட்டில்லா மகிழ்வடைகின்றேன்.

- கதிரவன் -



"ஒழுக்கம் பிச்சைக்கார உருவில் இருந்தாலும் மதிக்கப்படும்."

# தமிழ் இலக்கிய வரலாற்றிலும் சமூக வரலாற்றிலும் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் தடங்கள் சில அவதானிப்புக்கள்.



– பேராசிரியர்.செ.யோகராசா –

சங்ககாலம் தொடக்கம் சமகாலம் வரையிலுமாக தமிழ் இலக்கிய வரலாற்றின் முழுக்காலப்பகுதியின் ஆய்வு வளர்ச்சியில் தடம்பதித்தவராக திகழ்கின்றார்.. **அண்மையில் காலமான உலகத்தமிழறிஞர் பேராசியர் கா.சிவத்தம்பி** இவ்விதத்தில் ஆய்வுப் பொருள் ரீதியாக மட்டுமன்றி ஆய்வு அணுகுமுறை ரீதியிலும் புதிய வெளிச்சங்களைப் பாய்ச்சியவராக அவர் திகழ்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

சங்ககாலத்துடன் தொடர்புபட்ட பண்டைக்காலத் தமிழ் நாடக வளர்ச்சி பற்றிய இவரது ஆய்வானது **(பண்டைத்தமிழ்ச் சமூகத்தில் நாடகம்)** இத்துறை சார்ந்த முதன் முயற்சியாகும். அதுமட்டுமன்றி சமூக வரலாற்று நோக்கிலும் ஒப்பியல் நோக்கிலும் நிகழ்ந்த முதன முயற்சியுமாகும். இவ்வழி, தமிழ் மொழியின் தொன்மை உலக இலக்கிய வரலாற்றுடன் தொடர்புபடுத்தப்படுகின்றமை கவனத்திற்குரியது! பண்டைய தமிழ் நாடாக வரலாறு நிலப்பிரபுத்துவ வணிகயுகப் பின்னணி யில் நோக்கப்ப டுவதும் அன்று குறிப்பிடத்தக்கவை நாடக வளர்ச்சி ஏற்பட்டமைக்கான காரணங்களை அலசுவதும் இவ் ஆய்வின் சிறப்பம்சங்களுள் சிலவாகும்.

சங்க இலக்கியம் பற்றிய ஆய்வுகளுள் பொருளாதார புவியியல் நிலை நின்று திணைக்கோட்பாட்டினை அணுகிய முயற்சி பலரதும் பராட்டிற்குள்ளாகியது. திணைக் கோட்பாட்டின் உருவாக்கம் சமத்துவ வளர்ச்சி கொண்டது என்பது இவரது கண்டுபிடிப்பாகும்.

பக்தி இலக்கியங்களை பக்திகொண்டு நோக்காமல் இலக்கிய ஆக்கங்களாக அழகியல் கண்கொண்டு நோக்கியமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வழி தமிழ் பக்தியின் மொழி என்ற கருத்து மேலும் வலுப்பெற்றது.

இதன் தொடச்சிபோன்று விஜய நகர காலத்து பக்தி இலக்கிய முயற்சிகளை இரண்டாவது பக்தியுக முயற்சியாக இனங்காண்பதும் முக்கியமானதாகின்றது..

தமிழில் எழுந்த கிறிஸ்தவ, இஸ்லாமிய இலக்கியங்களை தமிழ்ப் பண்பாட்டு நிலை நின்று பார்ப்பதும், சைவ சித்தாந்தத்தை சமூகவியல் நோக்கில் அவதானிப்பதும் குறிப்பிடத்தக்கனவே.

நவீன இலக்கியங்களுள் “சிறுகதை” முக்கியமானதொரு புதிய

வடிவமாகும். இச் சிறுகதை வளர்ச்சி இரசனை நோக்கிலே மாற்றப்பட்டு வந்த சூழலில் வரலாற்றியல் முறையிலும் விமர்சன நோக்குடனும் பார்ப்பதாக இவரது பார்வை வெளிப்பட்டது. **(தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்)** இவ்வாறே நாவல் இலக்கியத்தின் சமூகவியல் பண்புகள் வற்புறுத்தப்பட்டு அதற்கும் சமூகவியல் வெகுசனத் தொடர்பியல் முதலானவற்றிற்குமிடையிலான தொடர்புகள் முதன்மைப்படுத்தப்பட்டு அணுகப்படுகின்றது. **(நாவலும் வாழ்க்கையும்).**

பாரதி பற்றிய ஆய்வினை **"பாரதியியல்"** ஆக வலுப்படுத்தியவர் ஈழத்தின் இன்னொரு பேராசிரியரான க.கைலாசபதி (இவர்கள் இருவரும் இரட்டையர்கள். என்று அழைப்பட்டவர்கள். இருவர் தம் ஆய்வுகளுக்கிடையே நெருக்கமான ஊடாட்டங்களுண்டு.) இத்தகை நிலையில் பாரதி பற்றிய முக்கியமான விடயமொன்றை சர்ச்சையை பாரதி மகாகவியா இல்லையா? தமிழ் அரசியல் சமூக வரலாற்றுப் பின்புலத்தில் அணுகியவர் எமது பேராசிரியர் (பாரதி முதல் மகாகவி வரை;) தம்மோடு அன்று இளம் ஆய்வாளராக இருந்த அ.மார்க்ஸ் என்பவரையும் இணைத்து தஞ்சைப் பல்கலைக்கழக வருகை தரு ஆய்வாளராக சென்ற போது இவ் ஆய்வை மேற்கொண்டார்.

தமிழ் விமர்சனம் தொடர்பான வளர்ச்சி என்று பார்க்கின்ற போது விமர்சன வரலாறு முக்கியமான நவீன விமர்சனக் கோட்பாடுகள் அவை சிலவற்றின் பிரயோக விமர்சன முறைமை **(உ-ம்: மார்க்கிய விமர்சனம்)** பற்றிய இவரது ஆய்வுகளும் கவனத்திற்குரியன. (தமிழில் விமர்சனச் சிந்தனைகள் முதலியன.)

நவீன இலக்கிய உருவாக்கம் தொடர்பான சமூக, அரசியல், பொருளாதாரப் பின்புலம் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொண்டமையும் இவ்விதத்தில் குறிப்பிட்டதொரு ஆய்வு முயற்சியாகின்றது. நவீன கால இலக்கிய வளர்ச்சியில் தாக்கமேற்படுத்திய திராவிட இயக்கம், தனித்துவ இயக்கம் முதலானவற்றின் அரசியல் பின்னணி பற்றிய பேராசிரியரின் ஆய்வுகளும் முக்கியமானவையாகும்.

ஆரம்பத்தில் தொல்காப்பிய கவிதையியல் பற்றிய ஆய்வை மேற்கொண்ட பேராசிரியர் அண்மையில் ஒட்டுமொத்தமான தமிழ்க் கவிதையியல் பற்றிய ஆய்வையும் மேற்கொண்டார்.

1980வரை எழுதப்பட்டு வந்துள்ள தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களின் எழுது முறை பற்றிய மிக முக்கியமானதொரு ஆய்வுப் பேராசிரியரால் மேற்கொள்ளப்பட்டது. **தமிழ் இலக்கிய வரலாற்றெழுது முறை** (Historiography) பற்றிய முதல் ஆய்வு முயற்சி இவருடையதே! இவ்விதத்தில் இலக்கியத்தினை தனியே இலக்கிய வரலாறாகக் கொள்ளாது இலக்கியவழி வரலாறாகக் கொள்ளும் போது (அதாவது இலக்கியமும் வரலாறும் இணையும் போது) ஏற்படும் பிரச்சினைகள் தமிழில் முதன் முதலாக அலசப்படுகின்றது. **(தமிழில் இலக்கியவரலாறு)**

தமிழ் இலக்கண உருவாக்கம் பற்றி சமூகவியல் நோக்கில் அமைந்த இவரது ஆய்வு முயற்சி தமிழ் அறிஞர் பலரை வியப்பிற்கும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய இத்துறைசார் முதன் முயற்சி என்பதும் கவனத்திற்குரியது. **(இலக்கணமும் சமூக உறவுகளும்)**

தமிழ்க் கலைகள் தொடர்பாக குறிப்பாக தமிழ்ச்சினிமா தொடர்பான பண்பாட்டு நோக்கிலான இவரது ஆய்வுகளும் பலரது பாராட்டுதல்களைப் பெற்றுள்ளன. **(தமிழ்ப்பண்பாட்டில் சினிமா)**

தமிழ் இலக்கிய வரலாறு என்ற ஆற்றின் மிக முக்கிய கிளையாக இன்று **ஈழத்து இலக்கியம் / ஈழத்து இலக்கிய வரலாறு** உருவாகியிருப்பது இலக்கிய ஆர்வலரறிந்த உண்மையாகும்.

ஈழத்து இலக்கியம் என்ற சிந்தனை (அரசியல், சமூக, பண்பாட்டுப் பின்புலத்தில் ஐம்பதுகளளவிலே) உருவான காலத்தில் அதற்கான கோட்பாட்டு ரீதியான (தேசிய இலக்கியம் /மண் வாசனை / முற்போக்கு) தடங்களை உருவாக்கியவர்களுள் பேராசிரியர் முக்கியமானவர்.

ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சி, மரபு இலக்கிய வளர்ச்சி, ஈழத்து முக்கியமான ஆளுமைகள் தொடர்பான ஆய்வுகள் பல பேராசியரால் நிகழ்த்தப்பட்டுள்ளன.

ஈழத்து நாடகவளர்ச்சி தொடர்பாக ஆய்வுகளில் மட்டுமன்றி செயற்பாட்டு ரீதியான முயற்சிகளிலும் பேராசிரியர் ஈடுபட்டவர் என்பது விதந்துரைக்கப் படவேண்டியது இத்துறையில் அவரது பன்முகச் செயற்பாடுகளுள் நாடகமும் அரங்கியலும் பாடசாலை மட்டத்திலே கற்கை நெறியானமையும், பல்கலைக்கழக மட்டத்திலே உயர் கற்கை நெறிப்பாடமாக ஆனமையும் விதந்துரைக்கப்பட வேண்டியவை தமிழ் ஆய்வுலகிலே பேராசிரியர் ஏற்படுத்திய திருப்பங்களுள் தமிழ்ச் சமூகம் , தமிழ் அரசியல், தமிழர் வரலாறு தொடர்பான துறைகளிலே கவனஞ் செலுத்தியமை தனித்துக் குறிப்பிடத்தக்கவை! தமிழகத்தில் பண்டைக்கால சமூக உருவாக்கம் (Studiein Ancie nt tamil Society)

திராவிட இயக்க அரசியல் (திராவிடஇயக்கம் கருத்து நிலையின் இன்றைய பொருத்தப்பாடு வரலாற்று நோக்கு) முதலிய நூல்கள் இவ்விதத்தில் முக்கியமானவை.

ஈழத்திலே பொதுவான சமூக வரலாற்று அடிப்படை (இலங்கைத் தமிழர் யார், எவர் முதலியன) சார்ந்தும் சிறப்பாக யாழ்ப்பாணத் தமிழ் சார்ந்தும் நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள் கவனத்திற்குரியவை. **(யாழ்ப்பாண சமூகத்தை விளங்கிக் கொள்ளல்)**

ஈழத்து அரசியல் பற்றி நீண்ட காலம் எழுதிவரினும் சமகால அரசியல் நெருக்கடிகள் பற்றி பீஷ்மர் என்ற புனைப்பெயரில் பத்திகைகளில் எழுதிய கட்டுரைகள் பல சர்ச்சைகள் ஏற்பட வழிவகுத்தன.

மலையகச் சமூகம் பற்றிய கருத் தரங்கு உருவாக்கத்திலும் அன்னார் செலுத்திய கவனம் குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு சமூகம் பற்றிய கருத்த ரங்கு நடத்தப்பட திட்டமிடப்

பட்டதாயினும் நிகழ்த்த முடியவில்லை.

பிறந்தகப் பற்றுடைய பேராசிரியர் தமது கரவெட்டி தொடர்பாக இறுதிக் காலத்தில் முக்கியமான சில ஆய்வுகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (பார்க்க:- **கரவை விக்னேஸ்வரா வழி வந்த ஒரு தமிழ் அறுவடை - 2011)**

மேற்கூறிய விதங்களிலே நோக்கும் போதுதான் பேராசிரியர் பற்றிய முக்கிய தொரு உண்மை புலப்படும். தமிழ் ஆய்வினை தமிழியல் ஆய்வாகப் பரிணமிக்கச் செய்த முன்னோடிகளுள் முக்கியமானதொரு இடம் தமிழ் இலக்கிய வரலாற்றில் பேராசிரியருக்கிருக்கிறது என்பதே அதுவாகும்.

பேராசிரியர் ஆய்வாளர் மட்டுமன்று சமூகச் செயற்பாட்டாள ருமாவார். குறிப்பாக எண்பதுகளில் யாழ்ப்பாணப் பிரஜைகள் குழு செயற் பாட்டிலும் பின்னர் அகதிகள் புனர்வாழ்வு நிலையச் செயற்பாடுகளிலும் (TRRO) இக்கட்டான நேரங்களில் அவர் பங்குகொண்டு பணியாற்றியமை இவ் விதத்தில் முக்கியத்துவமான தொன்று!

பேராசிரியரது கல்வித்துறைப் பங்களிப்பு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துடன் அதிககாலம் தொடர்பு பட்டிருந்தது. அதேவேளையில் உலகின் பிரசித்தமான பல பல்கலைக்கழகங்களிலும் அவர் வருகை தரு பேராசிரியராகக் கடமையாற்றியமையும் கவனத் திற்குரியது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பணி புரிந்த காலத்திலும் (1997 - 1998) முக்கியமான கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்ட பேராசிரியர் அங்கு கடமை புரிந்த கல்விசாரா ஊழியர்களுக்கு தமது நூலொன்றினைச் சமர்ப்பணம் செய்திருப்பது பலருமறியாததொன்று

யாழ்ப்பாணம், கரவெட்டி கிராமத்திலே 1932ல் பிறந்து இவ்வருடம் இவ்வுலக வாழ்விலிருந்து விடைபெற்ற பேராசிரியர் ஆரம்பத்திலே கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியிலும் மாணவராக விளங்கினார். ஐம்பதுகளில் இலங்கை வானொலி இனங் கண்ட சிறந்த நடிகராக, நாடகத் தயாரிப்பாளராக விளங்கிய பேராசிரியர் பேராதனைப் பல்கலைக் கழத்தில் எம்.ஏ.பட்டம் பெற்றார். பல்கலைக் கழகத்திலே விரிவுரையாளராக கடமையாற்றிய நிலையில் கேம்பிரிஜ் பல்கலைக்கழகம் சென்று உலகப் புகழ்பெற்ற மார்க்சிய பேராசிரியர் தொம்சனின் மேற்பார்வையில் கலாநிதிப் பட்ட ஆய்வு மேற்கொண்டார். பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்தார் (1978 - 1996).

பேராசிரியர் பெற்ற உயர்கௌரவங்கள் பலவற்றுள் மூன்று முக்கியமானவை.

(i) தமிழக அரசின் திரு.வி.க.விருது

(ii) சென்னை பல்கலைக்கழகம் பேராசிரியர் பற்றி நிகழ்த்திய பன்னாட்டுக் கருத்தரங்கு.

(iii) கேம்பிரிஜ் பல்கலைக்கழகம் உலகின் 2000 புலமையாளர்களுள் ஒருவராகவும் உலகின் 2000 புத்திஜீவி களில் ஒருவராகவும் இனங் கண்டமை அமெரிக்க (biographical Associat ion medel of honour) வழங்கியமை

நீலா பாலன் -

# கலைஞன்

முற்றிப் பருத்த விருட்சத் திருந்து
முளைத்து வளர்ந்த கிளை நான்
முற்பட்டதையும் சப்பிச் சுவைத்து
முழுதாய்ப் பழுத்த பழம் நான்.
அற்பத் தனத்தை வெட்டிச் சரித்து
அகலாய் ஒளிரும் கதிர் நான்
அக்கம் அயலை ஒக்கச் சுகித்து
அழியா தளிக்கும் கலைநான்

பெருக்கச் சுருங்கி வகுக்க மிகைக்கும்
புதிய கணக்கின் நெறிநான்
உருக்கத் தகுந்த விதத்தில் மலர்ந்து
உளத்தில் அமரும் கவிநான்
எரிக்கும் அனலைக் கொதுப்பி உமிழ்ந்து
இருளைப் பொசுக்கும் பொறிநான்
சரித்து... பிழையை நெரித்து... முறித்துச்
சரிக்காய் உழைக்கும் தறிநான்

உலகின் இயலில் முழுதும் நனைந்து....
உழுத விழையும் இளைஞன்
அழகின் சுவையைக் குலவும் முறையில்
அணுகி அணையும் ரசிகன்
பழகும் தமிழில் கவிதை எழுதி
உணர்வைப் பதியும் கவிஞன்
பழைமை சுகித்து புதுமை நிறைத்து
உலகைச் செதுக்கும் கலைஞன்

உடலை அழிக்கும் சிறப்பை வென்ற
கலைத்தா யளித்த சிசுநான்
உடல்நீ றாகிப் பலநாட் கடந்தும்
உரித்துப் பார்க்கும் பழம்நான்
சடைத்துப் பருத்த மரத்தின் கிளையாய்
சனத்துட் பிறந்த ஆல் நான்
விட்டத்தை எடுத்துக் குடித்தும் அழியாப்
படைத்தோன் எழுதும் கோல் நான்



"மரியாதையாக நடப்பதும், பேசுவதும் செலவில்லாத செல்வங்கள்"

- கலாபூசணம் கா.சிவலிங்கம் -

சிரிகதை

# பொன்னாடை

ஒரு கிராமம் அங்கு வருடாவருடம் சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடும் முகமாக கலை விழா நடைபெறுவது வழக்கம். அதில் ஒரு அம்சமாகக் கலைஞர்கள் கௌரவிப்பும் இடம்பெறும். அக்கிராமக் கலை இலக்கியக் கழகத்தினால் வயது மூப்பின் அடிப்படையில் மூத்தகலைஞர்கள் ஐவர் தெரிந்தெடுக்கப்பட்டுப் பாராட்டி அக் கலைவிழாவில் கௌரவிக்கப்படுவார்கள். நாடகம், நாட்டுக்கூத்து, இசை, நடனம், ஓவியம், சிற்பம், ஆக்க இலக்கியம் போன்றவற்றில் தடம்பதித்த கலைஞர்கள் அதில் உள்ளடக்கப்படுவார்கள். வாழும் போதே கலைஞர்களை வாழ்த்தும்போது அவர்கள் மனம் புளகாங்கிதம் அடைந்து அவர்களது ஆயுள் நீடிக்கும் என்பது ஒரு நம்பிக்கை.

சென்ற வருடமும் அவ்வாறே கலை விழா நடத்தப்பட்டது. கலை நிகழ்ச்சிகளின் மத்தியில் கலைஞர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுக்கொண்டிருந்தனர். ஒவ்வொரு கலைஞரையும் மேடைக்கு அழைத்து மலர் மாலைகள் அணிவிப்பதும், பொற்கிழி அளிப்பதும், நற்சான்றிதழ் வழங்குவதும், பாராட்டிப் பேசுவதுமாக மேடை அமர்க்களமாகத் தான் காணப்பட்டது. அவ்வப்போது ஒரு கலைஞரின் முறைவந்தது. அவர் மேடைக்கு அழைக்கப் பட்டார். அவர் கௌரவிக்கப்பட்டுக் கொண்டிருந்த போது அவரது நெருங்கிய நண்பர் ஒருவர் மேடைக்குவந்து அக்கலைஞரைப் பொன்னாடை போர்த்திக் கைகுலுக்கி வாழ்த்திக் கௌரவித்தார். கலைஞர்கள் எவருக்கும் பொன்னாடை போர்த்தப் படாத விடத்து இவருக்கு மாத்திரம் பொன்னாடை போர்த்தப்பட்டது. அதனால் அவருக்கு மகிழ்ச்சியும் புகழ்ச்சியும் இரட்டிப்பாகியது. பின் அவர் தனது இருக்கையில் வந்தமர்ந்து பொன்னாடையைப் பத்திரமாக மடித்து வைத்துக் கொண்டார். போகும்போது கொண்டு செல்வதற்காக மாலையையும் இருக்கையில் போட்டுவைத்திருந்தார்.

நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெற்றன. பிரமுகர்கள், பார்வையாளர்கள் அனைவரும் மண்டபத்தை விட்டு வெளியேறத் தொடங்கினர். அதன்பின் கௌரவிக்கப் பட்ட கலைஞர்கள் கலை விழா ஏற்பாட்டாளர்களுக்கு நன்றி கூறிவிட்டு ஒவ்வொருவராக மண்ட

பத்தை விட்டு மகிழ்ச்சியுடன் வெளியேறிக்கொண்டிருந்தனர். பொன்னாடை போர்த்தப்பட்ட கலைஞரும் அவ்வாறு வெளியேறும் போது அப்பொன்னாடையைப் போர்த்திய நண்பர் பின்னால் ஓடிவந்து கலைஞரின் கையைப் பிடித்துக் கொண்டு "வாடாமச்சான் ஒரு கதை ஒண்டு" என்று கூறியவாறு ஒரு ஒதுக்குப் புறமாக அழைத்துச் சென்றார். "என்னடா விஷயம்" என்று நண்பரைக் கேட்டார். அக் கலைஞர் "டேய் மச்சான்! நான் போர்த்தின பொன்னாடையைத் தாடா. அது என்ர புத்தக வெளியீட்டு விழாவில எனக்குப் போர்தின என்ர பொன்னா டைடா" என்று கூறி அதைக்கேட்டு ஒற்றைக் காலில் நின்றார் நண்பர். கலைஞருக்குத் "திக்" கென்றிருந்தது. "டேய் விசரா, உன்ர பொன்னாடையப் பின்ன ஏன்ரா எனக்குப் போர்த்தின நீ" என்று கரிந்து விழுந்தார் கலைஞர். "நானும் உன்னக் கௌரவிக்க வேணும் போல இருந்ததுடா. புதுசு வாங்கவும் காசில்ல. அதுதான் இப்பிடிச் செஞ்சிற்றன். மன்னிச்சிக்கொள்ளுடா. ஒருத்தருக்கும் தெரியாம அத இந்த வேக்குள்ள வச்சிவிடுடா" என்றார் நண்பர். கலைஞரும் அசடு வழிய ஆத்திரத்தோடு பொன்னாடையைப் பையினுள் வைத்துக் கொடுத்துவிட்டுச் சென்றார் பெரு மூச்சுடன்.

## கோடரி

**– தெருவோர நடிகன் –**

தொலைந்த பொருளை
தேடிய போட்டியில்
தொலைந்தவர்கள் அதிகம்
பொருளுக்குரியவனே
பொருளைக் காட்டியதால்
கோடரிகள் கையடிக்க
பொறக்கியவன் விருது பெறுகிறான்
தொலைக்கவும் ஒன்றுமில்லை
பொறக்கவும் முடியவில்லை – நாம்
இருப்பதை பாதுகாப்போம்.

# அரிச்சந்திர மயான காண்டம்

*தயாரிப்பு :* **த.இன்பராசா (கதிரவன்)**

(2003ம் ஆண்டு மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகாவித்தியாலயம் அகில இலங்கை தமிழ்த்தினப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம்) (2006ம் ஆண்டு மண்முனைப்பற்று பிரதேச சாகித்திய விழாவில் முதலாம் இடம் பெற்ற இசை நாடகம்

## காட்சி -1

**இடம் :- அந்தணர் இல்லம்**

**பாத்திரங்கள் :- அந்தணர், சந்திரமதி, லோகிதாசன், சிறுவன்**

**பிண்ணனி பாடல்:**

வாய்மை யெனும் வார்த்தை யொன்று
இன்மை மறுமை பயனளிக்கும்
பொய் சொல்லா உத்தமரின்
புகழினையே கூற வந்தோம்
பொய் களவு பாதகத்தால்
பாரிலுள்ளோர் வாமுகின்றார்
மெய் பேசி வாழ்ந்த மகான்
மகிமைகளை கூறவந்தோம்.

(சந்திரமதி, லோகிதாசன் அந்தணர் இல்லத்தில் வேலைகளை செய்தல்)

**அந்தணர் :-** ஏய்! சந்திரமதி! என்ன அளவற்ற சிந்தனை அதிகவேலை இருப்பது ஞாபகம் இல்லையா? அரச குலத்துப் பெண்ணாக இருந்தாலும் இன்று நீ என் அடிமை இதை மனதில் நிறுத்தி உனது அன்றாடக் கடமைகளை ஒழுங்காகச் செய்.

**சந்திரமதி :-** சுவாமி! தங்கள் கட்டளைப்படியே அனைத்துக் கடமைகளையும் சரிவரச் செய்து முடிக்க நான் சித்தமாக உள்ளேன்.

**அந்தணர் :-** ம்.... உனது நிலையினை நினைத்தால் பரிதாபமாக இருக்கின்றது. என்ன செய்வது நான் உன்னை விலைக்கு வாங்கிவிட்டேன் உனது உத்தமன் விடாப்பிடியாக இருந்தால் எப்படி? அரிச்சந்திரன் :கேட்பதை தருவேன்" எனக் கூறிய வாயினால் தரமாட்டேன் என்று கூறிவிட்டால் இழந்த செல்வங்களெல்லாம் மீண்டும் வந்துவிடும் உனது அடிமை வாழ்வும் மாறி அரசவாழ்வும் வந்துவிடும்.



"மண்ணாக மறைந்தால் தான் செடியாக முளைக்க முடியும்"

**சந்திரமதி :-** ஐயா! சுவாமி! அவ்வாறு கூற வேண்டாம் அந்த உத்தமரின் எண்ணப்படி வாழ்வதே நாங்கள் செய்த புண்ணியம்.

**அந்தணர் :-** சரி... சரி.... சூரிய உதயத்திற்கு முன் எழுந்து அனைத்துக் கடமைகளையும் நாளாந்தம் செய்யவேண்டும்.

**சந்திரமதி :-** அப்படியே ஆகட்டும் சுவாமி.

**அந்தணர் :-** சந்திரமதி! ஆச்சிரத்திலே விறகு முடிந்துவிட்டது கானகம் சென்று காய்ந்த விறகுகளை கொண்டு வாருங்கள்.
(அந்தணர் வெளியேறுதல்)

**லோகிதாசன் :-** அம்மா! நீங்கள் இங்கே இருங்கள் நான் காட்டிற்கு போய் விறகு எடுத்து வருகிறேன்.

**சந்திரமதி :-** மகனே! லோகிதாசா! காட்டிலே கரடி, புலி அதிகம் வீட்டிலே அதிகம் வேலை இருக்கின்றது நீ கவனமாகச் சென்று விறகு எடுத்து வா மகனே!

**சந்திரமதி பாடல்:-**

போய் வருவாய் என் மகனே!
புத்தியுடன் பத்திரமாய்
நீ திரும்பும் நேரம் வரை....
நின்று வழி நான் பாத்திடுவேன் – மகனே!
வழி மேல் விழி நான் வைத்திடுவேன்.

(மகனை அனுப்பிவிட்டு சந்திரமதி வீட்டுவேலைகளை கவனித்தல்)

**பிண்ணனி பாடல்:-**

சிந்திய கண்ணீருடன் சிவந்தழகு வதனமுடன்
அந்திபடும் நேரம் வரை அந்தணராச் சிரமத்திலே
சந்திரமதி அயோத்தி மாநகரின் எழில்மாது
எந்திர வேகத்திலே எடுத்தவேலை முடிக்கையிலே.............

(சிறுவன் ஒருவன் ஓடி வருதல்)

**சிறுவன் :-** அம்மா! அம்மா! உங்கள் மகன்... உங்கள் மகன் (தடுமாற்றத்துடன்) லோகி.... லோகிதாசன் காட்டிலே பாம்பு கடித்து இறந்து விட்டான்.

**சந்திரமதி :-** (பதட்டத்துடன்) என்ன? என்ன? ஐயோ மகனே!
(கானனம் நோக்கி சந்திரமதி ஓடுகிறாள்)

**பிண்ணனி பாடல்:-**

அரசாளும் நல்மகன் அடந்ததோர் காட்டிலே
அரவத்திற்கிரையாகி ஆருயுயிர் இழந்ததேன்?
தவிக்கிறதே என்மனம் உலையாக கொதிக்கிறதே
சந்திரரின் மகனிவன் சாவின் வாசல் நாட
நந்தவனம் தேடி சந்திரமதி நடந்தாள்.
தந்தையரின் நல்வார்த்தையை மகனும் காப்பாற்ற
அந்தணரின் கட்டளையால் காட்டில் மடிந்தானே.
உந்தன் தந்தை புகழ் சொல்லும் காவியங்கள்
செந்தமிழும் தமிழ்பாடும் அவனியெங்கும் (அரசாளும்)



"உலகில் குற்றமில்லாத ஒரே ஒரு மனிதனுண்டு, அவன் இன்னும் பிறக்கவில்லை."

காட்சி -2

**இடம் :- மயாணம்**

**பாத்திரங்கள் :- சந்திரமதி, புலையன் (சுடலைக் காவலாளி), லோகிதாசனின் இறந்த உடல்**

**சந்திரமதி :-** (விறகு வெட்டிய இடத்தில் லோகிதாசனின் சடலத்தை சந்திரமதி காணுதல், விழுந்து அழுதல்)
என் அருமை மகனே! அரசன் மகனாகப் பிறந்து இப்படி அநாதையாக அரவம் தீண்டி மடியவா? உன்னை அழகாக வளர்த்தேன்? இனி நாங்கள் யாருக்காக வாழ வெண்டும் எங்கள் வாழ்வுக்கு அர்த்தந்தான் உண்டா? மகனே! லோகிதாசா! கண்ணைத் திறந்து உன் அன்னையை ஒரு தடவை பாரடா மகனே பார் (கதறியழுதல்) உன் தந்தை உன்னையும் என்னையும் விடுவிக்க என்றாவது ஓர்நாள் வந்து எங்கே என் ஆசைமகன் என்று கேட்டால் எதிர் ஏது சொல்வேன் மகனே! இடிமேல் இடியாக நீ இறந்த சேதியும் அவர் காதில் விழ வேண்டுமா? மகனே! லோகிதாசா!

**சந்திரமதி ஒப்பாரி :-**
அயோத்தி மாநகரின்
அருமை புகழ் மைந்தா!
அநியாயம் செய்த பாவி
ஆனேனே என் மகனே!
பயபக்தி ஆன வேந்தர்
வாய்மை புகழ் சீலர்
விடுவிக்க வரும் நாளில்
என்ன சொல்வேன் என்மகனே!

(அந்தணரின் இல்லத்தில் கடமைகள் அதிகம் இருப்பதினால் இறந்த உடலை எரிப்பதற்காக அவசரமாக சுடலை நோக்கிச் செல்கின்றாள் சந்திரமதி)

**பிண்ணனிப் பாடல் :-**
சுந்தரவதனமிக்க அரிச்சந்திரர் அருமை மகன்
சந்திரமதியின் கையால் சுடலைநோக்கி ஏகின்றான்
காந்தளின் மலர் போன்ற கரங்கள் கொண்ட சந்திரமதி
ஏந்திக்கொண்டு மகனாரில் எரிக்கட்டையை ஏற்றுகின்றாள்

(இச்சம்பவம் நடக்கின்றபோது புலையன் வருகின்றான்)

**பிண்ணனிப் பாடல் :-**
வந்தனன் சுடலைக்காரன் வெங்கோப யானையவன்
கண்டனன் சுடலைதனில் எரிக்கட்டை எரியும் தீபம்
காற்பணமும் கொள்யாடை வாய்கரிசியும் கொடுத்திடாமல்
காட்டருகே பிணம் சுடுவார் யாரோ! என்று சத்தமிட்டான்.

தானன்ன தானன்ன தானா தன
தானன்ன தானன்ன தானா.

**புலையன் பாடல் :-**
காவலன் நான் இங்கு வந்தேன்
காட்டில் யாரது பிணமது சுடுவார்?
யாரடி பெண்ணே! நீ கூறும் - உந்தன்
ஊரென்ன? பேரென்ன? சொல்லும்.

**புலையன் :-** திருட்டுத்தனமாக பிணத்தைக் கொளுத்தும் பெண்ணே! கொள்ளியாடைத்துண்டும், காற்பணமும், வாய்க்கரிசும் தராமல் நீ இங்கே பிணம் கொளுத்துவது முறையற்ற காரியம் உடனே நான் கேட்டவற்றைக் கொடுத்துவிட்டு பிணத்தைச் சுடுவாயாக.

**சந்திரமதி :-** ஐயா! பெரியவரே! கருணை காட்டுங்கள்.

**பாடல் :-**
என்ன செய்வேன்? ஏது செய்வேன்?
என் மகனை எரிப்பதற்கு....
மெய்யெல்லாம் வாடுதையா..!
மெய்யாகவே ஒன்றுமில்லை
(சடலத்தில் வீழ்ந்து சந்திரமதி அழுதல்)

**புலையன் :-** ஏய்....! பெண்ணே! இறந்த உயிர் திரும்பவருவதில்லை நீ அழுதாலும் அழுதழுது கண்ணீர் வடித்தாலும் அதற்கென இருக்கும் முறையை மீறலாமா? பிணத்தை தூக்கு.

**சந்திரமதி :-** ஐயா! நான் உதவியற்றவள் இங்கு நடந்து கொள்ள வேண்டிய சம்பிரதாயங்கள் சடங்குகள் எனக்குத் தெரியாது ஏதும் புரியாது நீங்கள் இப்போது கேட்கும் எந்தப் பொருளையும் தரமுடியாத ஏழை நான் என்னிடம் பொருளும் யாராவது உறவுகளும் சொந்தபந்தமும் இருந்திருந்தால் ஓர் பெண்ணாகிய நானே தன்னந்தனியாக என் மகனை தோளில் சுமந்து வந்திருப்பேனா? எரிந்து மிஞ்சிய விறகுக் கட்டைகளை எடுத்து அடுக்கியா என் மகனை எரிப்பேன்? ஐயா! எனக்கு உதவி செய்யுங்கள் கருணை காட்டுங்கள்.

**புலையன் பாடல் :-**
பொன்னனைய மாதே! நான்
புலையனுக்கு அடிமையம்மா!
சொன்ன சொல்லு தப்பமாட்டேன்
கடமை அதுவே என்ன செய்வேன்?
வீரபாகு என் தலைவர்
சொன்னவாறு காற்பணமும்
கொள்ளியாடை துண்டு ஒன்று
கொடுத்துவிட்டு பிணம் கொளுத்து

(அழுது கொண்டு பாடுதல்)

**சந்திரமதி பாடல் :-**
துஞ்சிய மைந்தன் தன்னை
நெஞ்சுருக சுமந்து வந்து
பஞ்சபடும் பாடு ஆனேன் – வஞ்சிநான்
கெஞ்சுகிறேன் உன் அடியை

கஞ்சி குடித்து நானும்
காலையென எழுந்து வேலை
துஞ்சாமலே செய்து வாறேன் – வஞ்சிநான்
கெஞ்சுகிறேன் உன் அடியை
(சந்திரமதி புலையனின் காலில் வீழ்தல்)

**புலையன் :-** பெண்ணே! என்னைவிடு நான் புலையனும் அல்ல புலையனுக்கு அடிமையானவன் நீ என் பாதங்களை தொடுவது தகாது. இப்பொருளுக்கெல்லாம் நான் உரியவனல்ல என்னை ஆளும் தலைவன் சொன்னபடி கொடுத்து விட்டு பிணத்தைக் கொழுத்து வேண்டுமென்றால் என் தலைவன் எனக்காக கொடுக்கும் வாய்கரிசை மாத்திரம் கொடுக்கத் தேவையில்லை.

**சந்திரமதி :-** ஐயோ! நான் என்ன செய்வேன்
(சந்திரமதி மகனின் உடலில் வீழ்ந்து அழும்போது கழுத்திலே கிடக்கின்ற பொன்தாலியை காண்கின்றான் புலையன்)

**பிண்ணனிப் பாடல் :-**
சங்கின் எழில்போன்ற நங்கையவள் கழுத்தினிலே
தங்க மங்களனான் தனைக் கண்டான் புல்லயனவன்
சிங்க வீரம் கொண்ட வேந்தனல்லோ அரிச்சந்திரன்
மங்கை மதியவளின் மங்களனாண் தனைக் கேட்டான்

**புலையன் :-** பெண்ணே! பொய் பேசுவது ஈனத்தனம் பாதகமான செயல் எனக்கு முற்றாகப் பிடிக்காத வார்த்தை யாரும் இல்லாதவள், அநாதையென்றல்லாம் வாய் கூசாமல் பொய் கூறினாயே.

**சந்திரமதி :-** பொய்யா? நானா? நான் சொன்னவை யாவும் உண்மை ஐயா!

**புலையன் :-** உன் கழுத்திலே பொன் தாலி இருக்கின்றதே மறுக்காமல் ஏதும் இல்லை என்று உரைக்காமல் உன் தாலியை கழற்றிக்கொடு.

**சந்திரமதி :-** ஐயோ.... நான் செத்தேன்.
(சந்திரமதி மயங்கி நிலத்திலே விழுகின்றாள். மீண்டும் எழுகின்றாள்.)

(சந்திரமதி புலம்பி அழுகின்றாள்.)

**பாடல் :-**
அற்புக்கு ஆழியாண .... - என் கணவர்
விற்ற போது
பொற்பும் போம்
பொறை போம் ஐயோ - ஐ... ஐயோ..
கற்பும் போம் எப்படியோ..?

வானவரும் காணவொண்ணா...
மேன்மை புகழ் மங்களனான்
புலையனிவன் காணுவதோ - ஐ... ஐயோ...
காவல் மீறிப் போவதுவோ...

(புலையனான அரிச்சந்திரன் திகைத்துப்போய் நிற்றல்)

**சந்திரமதி :-** என் கணவர் அரிச்சந்திருக்கு மட்டுமேயன்றி தேவர்களாலும் காணமுடியாத தாலி இந்த புலையன் காணும் படியான நிலைக்கு ஆகிவிட்டதே (அழுதல்) என் கணவர் என்னையும் என் மகனையும் விற்றபோது மேலான குலப்பண்பாடு, அழகு, பெருமை, தவநிலை

என்பனவெல்லாம் எம்மை விட்டுப் போகலாம். ஆனால் எனது கற்புப் போவது எப்படியோ (சத்தமிட்டு அழுதல்)

**புலையன் (அரிச்சந்திரன்):-** ச...சந்...சந்திரமதி! நீ... நீயா? எமக்கா இந்த வெதனை? எமக்கா இந்த சோதனை ஐயோ! லோகிதாசா! மகனே! நீயா, விறகு வெட்டச்சென்று அரவம் தீண்டி இறந்தாய் மகனே! சந்திரமதி! நாம் யாருக்கு என்ன கெடுதல் செய்தோம்...

(அரிச்சந்திரன் / புலையன் லோகிதாசனை மடியில் கிடத்தி அழுதல்)

**சந்திரமதி :-** (திகைத்து) ஐயா! நீங்களா? புலை.... நீங்களா? புலையனுக்கு அடிமை நீங்களா? இந்தக் கோலத்தோடு இல்லை... இல்லை.... என்னால் நம்பமுடியவில்லை.

**புலையன் (அரிச்சந்திரன்):-** சந்திமதி! அழ வேண்டாம் மகனே! லோகிதாசா! கொதிக்குதடா என் மனம் தவிக்குதடா

(அரிச்சந்திரன் / புலையன் லோகிதாசனை கட்டியனைக்கின்றான்.)

**பாடல் :-**
தாமரை மலர் போன்ற
தங்கமே! என் மகனே!
நாடு போம் நகர்போம் - ஐயா! ஐ.. ஐயோ
உயிர் போம் எப்படியோ

**பிண்ணனிப் பாடல் :-**
இடியால் விழுந்த நாகம் போல் - இங்கு
இசைவற்று கிடந்தான் அரிச்சந்திரன்
மடிந்தால் இங்கே மடிவதென்று - சோர்ந்து
மண்ணில் மயங்கினாள் சந்திரமதி.

(மகனின் சடலத்தில் விழுந்து அழுதுகொண்டிருந்த புலையனான அரிச்சந்திரன் எழுந்து)

**புலையன் (அரிச்சந்திரன்):-** சந்திரமதி! எமக்கு இந்த வேதனையும் பல சோதனைகளும் வாய்மையாலே வந்தது இது எப்போதும் நன்மையைக் கொடுக்கும் நீ கலங்க வேண்டாம், கதறவேண்டாம். சந்திரமதி! என் எஜமானுக்கு சேரவேண்டிய பொருட்களை சேர்த்தே ஆகவேண்டும். தவறுவது முறையாகாது. எனவே உடனே புறப்படு அந்தணரிடம் சென்று கொள்ளியாடைத்துண்டும் காறப்பணமும் பெற்றுத் திரும்பு அப்போது தான் நம் ஆசை மகனை எரிக்கமுடியும். எந்த நிலை ஏற்பட்டாலும் கடமையில் தவறக்கூடாது சொந்தபந்தம் பார்த்து நம்பியவர்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தக் கூடாது. உடனே சென்றுவா.

(அரிச்சந்திரனின் வார்த்தைக்கு அடிபணிந்து சந்திரமதி அந்தணர் இல்லம் நோக்கி புறப்படுகின்றாள்.)

(காட்சி - 03 தொடரும் 10வது கதிரவனில்....)

"கதிரவன்" வெளிவர உதவும் அனைவருக்கும்
கதிரவன் கலைக் கழகத்தின் நன்றிகள்



# போதி மாதவப் புத்தர் பகவான்

- "கவிமணி" சி.க.பொன்னம்பலம் -

புண்ணியம் சேர்க்கும் **கங்கை**
வடதிசை பொங்கிச் செல்லும்;
எண்ணுதற் கரிய **ரோகிணி**
**நதி** ஒலித் துலாவி நிற்கும்;
[1]**கண்ணியம்** வாய்த்த நல்ல
**கபிலவாஸ்து நகரம்** தன்னில்
[2]**பண்ணிய** தருமப் பேறாய்ப்
பாலகன் பிறந்தான் அம்மா!

**தந்தை "சுத் தோதன"** மன்னன்
தாய் பெயர் **"மாயாதேவி"**;
வந்தவ தரித்த காலம்
வாய்த்த ஈராயி ரத்து
அறுநூறு ஆண்டின் முன்னர்;
[3] **அசிதமா முனிவர்** அன்று
மைந்தனைப் பார்த்துப் போற்றி
மலரடி முத்தம் ஈந்தார்.

"அரசனே! இந்த மைந்தன்
அரசனாய் அமைய மாட்டான்;
சிரங்குனிந் தடியர் போற்றும்
சிறப்பினை எய்தி வாழ்வான்;
வரந்தரு வள்ளல் போல்வான்;
வையகம் வழுத்தும் மேலோன்;
கரத்தினால் அபயம் தந்து
கருணையின் உருவாய் நிற்பான்".

முனிவரின் வார்த்தை, மன்னன்
முடியொடு மனம் அசைக்க,
இனிய **"சித் தார்த்தன்"** தன்னை
இங்கித மாகவே தன்
மனையினில் வைத்தே நல்ல
வகையினில் வளர்க்க எண்ணிக்
கனிவுறு மாதர் தம்மைக்
கடமையில் அமர்த்தினானே!

பாலகன் வளர்ந்த காலை
பாவலர் தனை அழைத்து
மேவுசீர் கல்வி யாவும்
மேம்பட ஊட்டச் சொன்னான்;
சாலவும் உணர்ந்த [4]**ஞானி**
**போலவன் இருக்கக் கண்டு**
நூல்வல ஆசான் அந்தச்
செய்தியை நுவன்று சென்றான்.

வாலிபப் பருவம் கொண்ட
**சித்தார்த்த** இளவல் தன்னை
சீலமார் **"யசோதரா"** வின்
சிந்தைசேர் கணவன் ஆக்கிக்
கோலமார் "வாரிசு" காணக்
கோமகன் **சுத்தோதனன்** தான்
மேவுநல் ஆர்வங் காட்டித்
திருமணம் நிகழ்த்தி வைத்தான்.

(தொடரும்)

| | | |
|---|---|---|
| 1. கண்ணியம் | - | ஒழுக்கம் மிகுந்த |
| 2. பண்ணிய | - | செய்த புண்ணியத்தின் பயனாய் |
| 3. அசிதமா முனிவர் | - | முனிவரின் பெயர் |
| 4. ஞானி | - | அனைத்து விடயங்களையும் அறிந்த கொண்ட |



"ஏளனமென்பது குறுகிய உள்ளத்திலிருந்து எழுகின்ற நச்சுப்புகை"

சிறுகதை

# இலையுதிர் காலச்சுழல்

- செ.குணரத்தினம் -

அன்று ஒரு லீவுநாள். காலையில் ஏதோ பணிவிடையாக வெளியே போயிருந்த சந்திரன், ஒரு பத்துமணி போல வீட்டுக்கு வந்தான். அவனைக்கண்டதும் அவன் மனைவி கமலா கலக்கத்தோடு வந்து "இங்க இப்பொரு புதினம் நடந்தது. உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

" என்ன புதினம்?"

" ரெண்டு மூணு ஆமிக்காரனுகள் வந்து, உங்களைக் கேட்டானுகள்."

" என்னத்துக்கு? நீ என்ன சொன்னா ?"

"ஒரு பணிவிடையாய் வெளிய போயிருக்கார் என்று சொன்னன்."

" என்னத்துக்காமெண்டு கேக்கல்லையா?"

"கேட்டனான்."

" என்ன சொன்னானுகள்?"

" நாம இருக்கிற ஊட்டவிட்டு ஒரு மாசத்துக் கிடையில எல்லாச் சாமனுகளையும் அள்ளித்து, ஒழும்பிரோணுமாம், இல்லையெண்டா நாங்க என்ன செய்யவமெண்டு தெரியும் தானே! என்டானுகள். எனக்கு ஒரே பயமாய் போயித்து."

" என்ன புதினம் இது? இந்த வீடு எங்கட சொந்த வீடு. இத சில்வா முதலாளிக்கு காசி குடுத்துத்தான் வாங்கினனாங்க என்று நீ சொல்லியிருக்கலாமே."

"எல்லாத்தையும் சொன்னனான்தான். ஆனா அவனுகள் ஒண்டையும் கேக்கிற மாதிரியில்ல. உங்கட ஆக்கள் எங்கட சிங்கள ஆக்களையெல்லாம் இருக்க விடாம அடிச்சித் துரத்தினவங்க! துவக்கக்காட்டி சுட்டுப்போடுவமெண்டு விரட்டினவங்க. அந்தப் பயத்தில தான் இங்க இருந்த எல்லாச் சிங்கள ஆக்களும் ஒடினவங்க. இப்ப அவங்கெல்லாம் திரும்பவும் வந்து சீவிக்கப்போறாங்க. "

"அவங்கட்ட தாயுறுதியெல்லாம் இருக்கு. நமக்குக்கணக்கக் கதவேணாம். உன்ர புருஷன் வந்ததும் நாங்க இங்க வந்து, இதச்சொன்னதாக சொல்லவேணும் எண்டு சொல்லிப் போட்டுப் போறானுகள். எனக்குப் பயமாக்கிடக்கு. இப்ப நாம என்ன செய்யிற?" இதைக்கேட்டதும் சந்திரன் கதிகலங்கிப் போனான்.

சந்திரனும், கமலாவும் காதலித்து அவர்கள் பெற்றோர்களின் சம்மதமில்லாமல் தங்கள் விருப்பத்திற்கே திருமணம் செய்து கொண்டவர்கள். இதனால் இருவீட்டாரின் எந்தவித உதவிகளுமே இவர்களுக்கு கிடைக்காது போயிற்று.



"பணம் என்பது பாம்பு, மகிழ்ச்சி என்பது கீரி - இவை ஒன்று சேராது."

கமலா பெற்றோருக்கு ஒரேயொரு பிள்ளை. இவளை நன்றாகப் படிக்கவைத்து, ஒரு உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரவேண்டுமென்று கனவுகண்டவர்கள். தந்தை ஒரு அரசாங்க உத்தியோகத்தர். தாய் ஒரு தமிழ் ஆசிரியை, நிறைய உழைத்து, வசதியாக வீடுவாசல், பொருள் பண்டங்களென்று, நிறையவே தேடி வைத்திருந்தார்கள்.

சில்வா முதலாளியின் கார் கராச்சில் மெக்கானிக்காக வேலை பார்த்த ஒரு ஏழைக் குடும்பத்துப் பையனான சந்திரனோடு பேசாமல் ஓடிப் போனதை கமலாவின் பெற்றோரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பொலிஸ் கோடு என்று போய் அலைய தன்மான உணர்வு இடம் கொடுக்கவில்லை. தங்கள் எண்ணத்தில் மண்ணைப் போட்டவள் எக்கேடு கெட்டுப் போனாலும் போகட்டும். இதைப் பார்த்துக் கொண்டிருந்தால் ஊரே நம்மைப் பார்த்து நாக்கு வழிக்கும்" என்று அவர்கள் வீட்டை வாடகைக்குக் கொடுத்து விட்டு, இருவருமே மாறுதலை எடுத்துக் கொண்டு ஊரைவிட்டே போய் விட்டார்கள்.

சந்திரன் அப்பா, அம்மா, அக்கா, அவளுடைய பிள்ளைகள் என்று ஒரு சின்னதான கொலனி வளவில் சிறியதொரு குடிசையில் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வந்தான்.

அக்காவின் கணவர் ஒரு ஓடாவியாக வேலை பார்த்தவன். தமிழ், முஸ்லிம் கலவர வேளையில் தெரியாத்தனமாக காத்தான்குடிக்கு வேலைக்கு போனவன் போனவன் தான். ஐந்து வருடங்களாகியும் இன்னும் வீடு திரும்பவில்லை. சந்திரன் கராச்சியில் போய் உழைத்துத்தான் இவர்களது. ஜீவனோபாயத்தையும் காப்பாற்றிவந்தான். இந்தநிலையில் இப்படி ஒரு பணக்கார வீட்டுப் பெட்டையைச் சந்திரன் கூட்டிக் கொண்டு வந்ததும் அவர்கள் பதட்டம் அடைந்தார்கள்.

சந்திரனின் உழைப்பு இனிமேல் தங்களுக்குக் கிடைக்காமல் போய் விடுமே என்பதைவிட செல்வாக்கும், வசதிகளும் கொண்ட குடும்பத்துப் பெட்டையைச் சந்திரனோடு சேர்ந்து வீட்டில் அண்டப்பிடித்தால் வீணான பிரச்சினைகள், தொல்லைகள் தங்களுக்கு வருமே என்றுதான் அவர்கள் பயந்து " நீங்கள் இருவரும் உங்கள் விருப்பம் போல எங்கேயாவதுபோய் வாழுங்கள். "என்று சொல்லி மெதுவாக நழுவிக் கொண்டார்கள்.

தன்னை நம்பி வந்தவளைக் கண்கலங்க விடக்கூடாது. என்று சந்திரன் எண்ணினாலும் அவர்கள் குடிவாழ ஒரு வீடு எடுப்பதில் கடும் சிரமம் உண்டானது.

பல இடங்களிலும் ஓடிப்பார்த்து இயலாமல் கடைசியில் சில்வா முதலாளியின் கால்களில் போய் விழுந்தான். சில்வா முதலாளிக்கு சந்திரன் மேல் நல்ல விருப்பம் இருந்தது.

பொய், களவு இல்லாதவன். திறமையான 'மெக்கானிக்' என்பதாலும் அவன் மேல் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். சின்ன வயதிலிருந்தே சில்வா

முதலாளியின் கராச்சில் சேர்ந்து வேலை பழகி, தரமாக மெக்கானிக்காக உயரும் வரையில் சந்திரன் அவர் பிள்ளை போலவே வாழ்ந்தான். இதன் காரணமாகவோ அவனுக்கு தமிழ்க்கட்சிகள், இயக்கங்களென்றால் அறவே பிடிக்காது. சுதந்திரதினம், அது, இது என்று வந்தால் சிங்கக் கொடியை சந்திரனே ஏற்றி வைப்பான்.

இந்த நாட்டில் பிறந்த எல்லோருக்கும் இந்நாடு சொந்தம்! அவர்கள் சுதந்திரமாக எங்கும் போகலாம், எங்கும் வாழலாம். எந்தத் தொழிலையும் எவரும் செய்யலாம். உன்னுடையது என்னுடையதென்று சண்டை பிடிக்கவோ, பிரிந்து வாழவோ தேவையில்லை. என்ற அவனுடைய எண்ணமும், சில்வா முதலாளியின் எண்ணமும் ஒத்திருந்த தால் சந்திரன் மீது சில்வா முதலாளிக்கு ஒரு தனிப்பாசமும், பற்றும் இருந்தது.

இதையெல்லாம் எண்ணிப் பார்த்த சில்வா முதலாளி, சந்திரனையும், கமலாவையும் ஜெயந்திபுரத்திலிருக்கும் அவரது வீட்டில் வந்து வாழ இடம் கொடுத்தார்.

மட்டக்களப்பில் ஒதுக்குபுறத்தில் வடக்குப் பக்கமாக காடு மண்டிப் போய்க்கிடந்த பெரிய நிலப்பரப்பில் சிங்களப் பகுதியிலிருந்து பல சிங்களக் குடும்பங்களை அரசாங்கம் கொண்டு வந்து குடியேற்றியபோது சில்வா குடும்பமும் வந்து சேர்ந்தது. அப்போது எந்த விதமான இனப்பிரச்சினையும் அங்கே இருக்கவில்லை.

காடுகளை வெட்டி, வளவுகளை அளந்து, வீடுகளைக் கட்டிக் கொடுத்து, ஜெயந்திபுரம் என்று பெயரையும் சூட்டி பாதைகள், மின்சார வசதிகள், பஞ்சலை, பள்ளிக்கூடம் என்று சகல வசதிகளையும் அரசாங்கம் செய்து கொடுத்து ஜெயந்திபுரத்தை ஒரு சிங்களக் கிராமமாக மாற்றிக் கொடுத்திருந்தது.

அரசாங்கப்பூமி என்பதால் குடியிருந்த அனைவருக்கும் ஒப்பபூமி உறுதிப்பத்திரம் வழங்கப்பட்டன.

இங்கு வாழ்ந்த சிங்களவர்கள் மட்டக்களப்பு நகரில் ஹொட்டல்கள், பேக்கறிகள், கார்கராச்சிகளை வைத்துக் கொண்டு தொழில் பார்த்தார்கள். நாளடைவில் முகத்துவாரப் பகுதிகளில் மீன் வாடிகளும் உருவாகின.

சில்வாவும் ஒரு கார் கராச்சியை அமைத்துக் கொண்டார். வீடு ஜெயந்திபுரத்தில், கராச் மட்டக்களப்பிலென்று அவர் சீவியம் ஓடியது.

சில்வா முதலாளியின் வீட்டில் சந்திரனுக்கும், கமலாவுக்கும் வாழ இடம் கிடைத்ததில் இருவருக்கும் பரமதிருப்தி. ஒரு பக்கத்தில் சில்வா முதலாளியின் குடும்பமும் மற்றப் பக்கத்தில் சந்திரனும், கமலாவும் எந்தப் பிரச்சினையுமின்றி மகிழ்வோடு வாழ்ந்தார்கள்.

கால ஓட்டத்தில் கமலாவும் ஒரு பிள்ளைக்கு தாயாகிவிட்டாள். இதன் பிற்பாடு கூட கமலாவின் பெற்றோரோ அல்லது சந்திரனின் உறவுகளோ எவர் தானும் வந்து இவர்களை எட்டிக்கூடப் பார்க்கவில்லை. இதுபற்றிச் சந்திரனோ

அல்லது கமலாவோ கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

இப்படி இவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த போது தான் நாட்டில் நீறுபூத்த நெருப்பாகக் கிடந்த சிங்கள தமிழ் இனப்பிரச்சினை பரவலாக எங்கும் கொழுந்துவிட்டு எரியத்தொடங்கியது.

வெட்டுவதும், புதைப்பதும், சுடுவதும், லைற் கம்பங்களில் தொங்க வைப்பதும், தீவைப்பதுமாக மட்டக்க ளப்பு மரண பயத்தில் நடுங்கிக் கொண்டி ருந்தது.

இந்திய சுதந்திர போராட்டக் காலத்தில் “வெள்ளையனே வெளியேறு” என்ற கோஷங்கள் எழுந்தது போல இங்கேயும் “சிங்களவனே வெளியேறு!” என்ற கோஷங்களும், ஆர்ப்பாட்டங்க ளும் அதிகரித்தன. இரவோடு இரவாக பல சிங்களக் கடைகளும், மீன் வாடிகளும் தீக்கு இரையாகின. பொலிஸ் ஆமிப் பட்டாளங்கள் வந்து குவிந்தும் இயக்கங் களைக் கட்டுப்படுத்த முடியாதிருந்தது.

இரவில் பயம், பகலில் பயம். பீதியின் மத்தியிலேயே மக்கள் உயிர் களைப் பொத்திப்பிடித்து வாழ்ந்தார்கள். இந்த நிலையில் சில்வா முதலாளி புத்திசாலித்தனமாக நோனாவையும், இரண்டு பிள்ளைகளையும் பேசாமல் ஊருக்கு அனுப்பிவிட்டுத் தனியாளாய் இருந்து கொண்டார். இருக்கும் நிலை வரத்தைப் பார்த்தால் இப்போதைக்குப் பிரச்சினை தீராது போல சில்வா முதலா ளிக்கும் மனதில்பட்டது. மெல்லமெல்ல தனது முக்கியமான தளபாடச் சாமான் களையும் ஊருக்கு அனுப்பிவைத்து விட்டார். பிரச்சினை முற்றினால் பாஞ்சாலை அல்லது பொலிஸ் நிலையத்தில் போய்நின்று ஊருக்குத் தப்பிப்போய் விடலாம் என்பதே அவரது திட்டம்.

இரவு வேளைகளில் சந்திர னைக் கூப்பிட்டு ஊர் நிலவரம் பற்றிப் பேசுவார். சந்திரனும் அவருக்கு துணிச் சலோடு இருக்கப் பதில் சொல்வான். “சும்மா போங்க முதலாளி” இவனுகள்ற வெள்வெருட்டுக்கெல்லாம் நாம அசையப்போடா! நம்மப் பாதுகாக்கப் பொலிஸ் ஆமியெல்லாம் இருக்கு. பிறகேன் பயப்படவேணும்?” எவ்வளவு தான் சந்திரன் துணிவைக் கொடுத்தாலும் அவர் மனம் ஏற்பதாயில்லை. “என்னதா னென்றாலும் இவனும் ஒரு தமிழன் தானே. நாளைக்கு இவனே துவக்கைத் தூக்கிச் சுட்டுவிட்டால்.....” சில்வா முதலாளி உள்ளூரப் பயந்தார். “கார்கராச்சை ஒரு படியாக விற்றாகி விட்டது. இனி வீடொன்றுதான் பாக்கி, அதை என்ன செய்வது? இவன் சந்திரனுக்கே வீடுவளவைக் கொடுத்து விட்டு இரவோடு இரவாக ஊருக்குப் போய்விடுவோமா?” இரவு பகலாக சில்வா முதலாளிக்கு இதே யோசனை தான். “ வீடு வளவை வேறு யாருக்கு விற்றால்.... பாவம் இவன் சந்திரன் வீடு வளவு இல்லாத ஏழை என்னதான் இருந்தாலும் சின்ன வயதிலிருந்தே என் பிள்ளைபோல என்னோடு வாழ்ந்தவன். விபத்தொன்றில் என் கால் முறிந்த போது என்னைத்

தூக்கிச் சுமந்து, தம்பிலுவில் , போரதீவு என்று முறிவு வைத்தியர்களிடம் காட்டி மீண்டும் என்னை நடக்க உதவியவன். ஒரு நியாயமான விலைக்கும் குறைவாக இவனுக்கே வீடு வளவைக் கொடுப்பது தான் நியாயமானது. இந்த உதவி நம்ம பிள்ளகுட்டிகளுக்காவது வந்து சேரட்டும்." இப்படி யோசித்து முடிவெடுத்துக் கொண்ட சில்வா முதலாளி வழமைபோல ஒரு நாள் இரவு சந்திரனை அழைத்து விசயத்தைச் சொன்னார்.

"அவ்வளவு பெரிய தொகைக் காசி எனக்கிட்ட இல்ல முதலாளி, ஏதோ கொஞ்சம் போல குருவியப் போல சேத்து வச்சிருக்கன்." என்றான் சந்திரன்.

அவனைப் பார்க்க அவருக்குப் பரிதாபம் வந்தது. "எவ்வளவு மட்டில வச்சிருக்கா?" என்று கேட்டார்.

"இருங்க முதலாளி கொண்டு வாறன்!" என்றவன் எழுந்து போய் அவன் வைத்திருந்த பணத்தைக் கொண்டு வந்து சில்வா முதலாளியிடம் கொடுத்தான். இருபத்தைந்தாயிரம் ரூபா இருந்தது.

"சந்திரன், இந்தக் நாளையில இந்தக் காசிக்கு இந்த வீடிருக்கிற வளவக்கூட வாங்கேலாது எண்டுற விசயம் உனக்கு தெரிஞ்சிருக்கும். ஆனாலும் இந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டு நீ என்னிடம் இரண்டரை லட்சம் தந்ததாகவும் அதை நான் பெற்றுக் கொண்டதாகவும் கடிதம் எழுதி முத்திரையொட்டிக் கையொப்பம் வச்சித்தாறன். நீங்ளே காலமெல்லாம் இந்த வீட்டில் இருங்க. என்ன சரிதானே?" என்று சில்வா முதலாளி சொல்லி முடித்ததும் சந்திரன் கண்களில் நீர்மல்க, சில்வா முதலாளியை தெய்வம்போல பார்த்தான்.

"சந்திரன் நீ எனக்குச் செய்த உதவிக்காகவாவது இந்த வீட்ட நான் உனக்குச் சும்மாவே முறைக்குத் தந்திருக்க வேண்டும். ஆனாலும் ஒரு சேட்டைக்கூட சும்மா யாரும் தந்தால் அதைப் போட்டுக் கொள்ள மனம் கூசுவது போல இந்தப் பெரிய வீடு வளவச் சும்மா உனக்குத்தந்தால் உன் மனம் எவ்வளவு சங்கடப்படும். அதனால் தான் நீ தந்த பணத்தை நான் வாங்கிறன். உனக்கும் திருப்தி எனக்கும் திருப்தி இதை எவரிடமும் வெளியே சொல்ல வேண்டாம். ஆனால் நான் தரப்போகிற கடிதத்தை மாத்திரம் பத்திரமா வச்சிக்கோ."

சந்திரன் கண்களில் நீர் பனிக்க சில்வா முதலாளியையே பார்த்தபடியிருந்தான். வீடு வாசல்களை விட்டு போவதை விட அவருக்கு சந்திரனை விட்டுப் பிரிவது மிகவும் கஷ்டமாக இருந்தது. காலம் மிக வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. சில்வா முதலாளி ஊருக்குப் போய்விட்டார். அவர் மாத்திரமல்ல அங்கு வாழ்ந்த எல்லாச் சிங்களவர்களும் வெளியேறிக் கொண் டார்கள்.

கார் கராச்சை ஒரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவர் வாங்கி நடத்தியதால் தொழில் விசயத்தில் சந்திரன் பாதிப்படையவில்லை .

இயக்கத்திடமிருந்து மட்டக்களப்பை முற்றாக மீட்டெடுத்ததைப் போல வன்னி நிலப்பரப்பையும் கட்டுப்பாட்டுக்

குள் கொண்டு வந்து விடுவார்களாம். என்ற கதை அடிபட்டுக் கொண்டிருந்த வேளையில் தான் ஆமிக்காரர்கள் வந்து சந்திரனின் மனைவியிடம் வீட்டைவிட்டு எழும்ப வேண்டும் என்று சொல்லிவிட்டுப் போனார்கள்.

என்னங்க, எதுவும் பேசாம அப்பிடியே நிக்கிறீங்க இப்ப நாம என்ன செய்யிற?" பதறினாள் கமலா. சந்திரன் கமலாவின் கேள்விக்குப் பதில் சொல்லா மல் தன் பாட்டிற்கே சிந்தித்தான்.

"எல்லா வசதிகளும் கொண்ட கல் வீட்டில் வாழ்ந்தவள் இவள். என்னை நம்பி வந்ததால்தானே இன்று இவளுக்கு இந்த நிலை வந்தது. இவளைக் கண் கலங்க வைக்கக்கூடாது. ம்... என்ன செய்யலாம்? ஒரு மாசத்திற்குள் எந்த வீட்டுக்கு மாறிப் போவது என்று விடாப்பிடியாக நின்றால்.... சேச்சே... இன்றைய நாட்டு நிலையில்.... நான் தான் செத்தாலும் கமலாவும், பிள்ளைகளும் சாகக்கூடாது." "ஏன் பேசாம நிக்கிறீங்க? சொல்லுங்கவன்!" கமலா அவசரப் படுத்தினாள்.

"அதப்பத்தித்தான் யோசிக்கி றன் கமலா. சில்வா முதலாளி உயிரோடி ருந்தா அவரைப் போய்ச் சந்திச்சி எப்படியாவது சமாளிக்கலாம். அவரும், நோனாவும் செத்துத் தெய்வமாகி பல வருசங்களாச்சி. அவர் முத்திரஒட்டி உறுதிபோல எழுதித்தந்த கடிதத்தையும் துலச்சிப் போட்டம். உறுதிகூடஇல்ல. எந்தவிதமான ஆதாரமும் இல்லாம என்ன செய்யிற. முதலாளிட புள்ள குட்டிகள் கொழும்பில எங்கேயோ வேலையாம். அவங்களச் சந்திச்சு பிரயோசனமில்ல. அவங்க நல்லவங்கெண்டா இப்பிடி ஆமிட்ட விசளம் அனுப்பி எழும்பச் சொல்லுவாங்களா? என்ன இருந்தாலும் சிங்களவன் சிங்களவன் தான் அந்த நாளையில சிங்களக் குடியேற்றத்தத் தடுத்தும் நமக்கென்றோர் நாடு வேணும், ஆட்சி வேணுமெண்டெல்லாம் சண்ட புடிக்க நான் கூட அதவிரும்பாம சிங்களவ னுகளோட சேர்ந்து நிண்டு எதிர்த்தனான் தான். இப்ப நாம இருக்கிறதுக்கு ஒரு துண்டு நிலமும் இல்ல. பெடிகள் போராடினது நூத்துக்கு நூறு சரிதான் எண்டுறது இப்பதான் தெரியுது. தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தாத்தான் தெரியும்.

நீ ஒண்டுக்கும் யோசிக்காத கமலா! எதுக்கும் பாப்பம். இன்னும் நாள் கிடக்குத்தானே? மத்தச் சிங்களவனு கள்ற வீடுவாசல்ல இருக்கிற நம்மப் போல ஆக்கள் என்ன செய்வார்களோ அப்படி நாமளும் செய்ய வேண்டியது தான். நடக்கிறது நடக்கத்தான் செய்யும். பார்ப்பம்! பார்ப்பம்!" என்றபடி சந்திரன் உள்ளே போனான்.

காதலித்த வேளையிலிருந்த துள்ளாட்டமும், சந்தோசமும் கொஞ்சந் தானும் இல்லாதவளாக மூலைக்கட்டில் முதுகைச் சாய்த்துக் கொண்டு மோட்டு வளையைப் பார்த்துக்கொண்டிருந்தாள் கமலா.



"ஒரு முள் குத்திய அனுபவம் காடளவு எச்சரிக்கைக்குச் சமன்"

# செய்திக் கதிர்

சமகால நிகழ்வுகள், கலை கலாசார விழாக்கள், மக்கள் மேம்பாட்டுக் கருத்துக்கள், அபிவிருத்தித் திட்டங்கள், விழிப்புணர்வு செயற்பாடுகள் அனைத்தையும் கதிரவனின் "செய்திக்கதிர்" பகுதிக்கு அனுப்பி வையுங்கள்.

## "கல்கிதாசன் கவிதைகள்" நூல் வெளியீட்டுவிழா

மேற்படி நிகழ்வு 20.02.2011 ஞாயிறு பி.ப.3:30 மணியளவில் தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் திருக்கோயில் பிரதேச செயலாளர் திரு.வி.அழகரெட்ணம் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் நூல் அறிமுகவுரையினை "செங்கதிர்" ஆசிரியர் திரு.த.கோபாலகிருஷ்ணன் நிகழ்த்த ஆய்வுரைகளை விநாயகபுரம் மகாவித்தியாலய அதிபர் திரு.சோ.பரஞ்சோதி, ஆசிரியர் திருமதி.ஜெகதீஸ்வரிநாதன், தாண்டியடி வி.வி.ஆசிரியர் திரு.ஞா.விநாயகமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தினர். மேற்படி நிகழ்விற்கான அழைப்பினை திருக்கோயில் தம்பிலுவில் சுற்றுப்புறங்களுக்கான உலகளாவிய அமைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கவிடயமாகும்.

## மட்டக்களப்பு மாவட்ட செயலகம் நடத்தும் "தேடல்"

மேற்படி நிகழ்வு மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர்கூடத்தில் 02.07.2011 சனிக்கிழமை காலை 9:45மணிக்கு மாவட்ட கலாசார இணைப்பாளர் த.மலர்செல்வன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் **"ஈழத்துக்கூத்துக்களின் சமகால இருப்பும் எதிர்நோக்கும் சவால்களும்"** எனும் தலைப்பிலான உரையினை கிழக்குப்பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சி.ஜெயசங்கர் அவர்கள் நிகழ்த்தினார்.

## முத்தமிழ் விழா

மட்டக்களப்புத் தமிழ்சங்கம் நடத்தும் **சுவாமி விபுலானந்தர் நினைவுதின முத்தமிழ் விழா** மட்டக்களப்பு இந்துக்கல்லூரி நல்லையா மண்டபத்தில் 16.07.2011 சனிக்கிழமை மு.ப. 09:00மணிக்கு பேராசிரியர் மா.செல்வராசா அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்விற்கு பிரதம அதிதியாக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் உயர்திரு.சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் பங்குபற்றினார். சிறப்பு விருந்தினராக முன்னாள் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களும் கௌரவ விருந்தினராக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் திருமதி. கலாமதி.பத்மராஜா அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.



"நண்பனுக்கு கடன் கொடுத்தால் நண்பனும் போய்விடுவான் கடனும் போய்விடும்."

## கௌரவிப்பு விழா

மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் நடத்தும் **வருடாந்த கௌரவிப்பு விழா.** மட்/புதுக்குடியிருப்பு கண்ணகியம்மன் கலையரங்கில் இரவு 8:30 மணிக்கு 11.05.2011 (புதன்கிழமை) மேற்படி சங்கத் தலைவர் திரு.த.இன்பராசா அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக பேராசிரியர் செ.யோகராசா அவர்கள் பங்குபற்றினார். மேற்படி நிகழ்வில் பல்கலைக்கழகம், கல்வியற்கல்லூரி, 5ம் தர புலமைப்பரிசில் ஆகியவற்றில் சித்திபெற்ற மாணவர்களுக்கு விருதுகளும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

## இளைஞர் தின விழா - 2011

மட்டக்களப்பு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப்பணிப்பாளர் ஜனாப் A.G.A.கபூர் JP தலைமையில் **"இளைஞர் தின விழாவும் சிறந்த இளைஞர் கௌரவிப்பும்"** 2011.05.28ம் திகதி சனிக்கிழமை மு.ப. 9:30 மணிக்கு மட்/இந்து இளைஞர் மன்ற கலாசார மண்டபத்தில் மட்டக்களப்பு அரச அதிபர் திரு.சு.அருமைநாயகம் அவர்களின் பங்குபற்றலுடன் சிறப்பாக இடம்பெற்றது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் தேசிய ரீதியாக கலை இலக்கிய மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற இளைஞர் யுவதிகள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்

## கதிரவன் - கதிர் - 08 வெளியீட்டுவிழா - 2011

கதிரவன் கலைக்கழகம் வெளியிடும் கதிரவன் " கல்வி இலக்கிய கலைச்சஞ்சிகை கதிர் - 08 (சித்திரை - ஆனி - 2011) வெளியீட்டுவிழா கதிரவன் கலைக்கழகத்தின் தலைவர் திரு.த.இன்பராசா (பிரதம ஆசிரியர் - கதிரவன்) அவர்களின் தலைமையில் மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. அந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் தேசிய இணைப்பாளருமாகிய செல்வி.க.தங்கேஸ்வரி அவர்கள் கலந்து சிறப்பித்தார். சிறப்பு அதிதிகளாக அன்புமணி. திரு.எஸ்.எதிர்மன்னசிங்கம் (முன்னாள் கலாசார பணிப்பாளர் வ.கி.மா), மட்டக்களப்பு வர்த்தக கைத்தொழில் சம்மேளனத் தலைவர் தேசபந்து எம்.செல்வராசா, மட்டக்களப்புத்தமிழ்ச் சங்க செயலாளர் திரு.க.மகாலிங்கசிவம், மண்முனைப்பிரதேச சபை உபதவிசாளர் திரு.ஆ.சிவலிங்கம், அம்மன் கலாலயத் தலைவர் திரு.மா.சதாசிவம், மட்டக்களப்பு தொழில்நுட்பகல்லூரி விரிவுரையாளர் திரு.மா.சோமசூரியன் ஆகியோரும் பங்குபற்றினர். கதிரவன் இதழின் ஆய்வுரையினை செங்கதிர் சஞ்சிகையின் துணைஆசிரியர் திரு.அன்பழகம் குரூஸ் அவர்கள் நிகழ்த்தினார்.

# புரிந்துணர்வு

- ச.மதன் - (கவிஞன் - ஆசிரியர்)

அவன்மேலோ அல்லது
அவள்மேலோ உனக்கு
புரிந்துணர்வு வந்தால்
பிரிவுகள் பாடையேறும்
"ம்" கூட இதிகாசம் எழுதும்

"உம்" சொன்னாலும்
சொல்லா விட்டாலும்
உண்மை விளங்கும்

மௌனம் கூட உனக்கு
பதில் சொல்லும்
இடைவெளிகள்
இடைநிறுத்தம் செய்யும்
மாற்றுக் கருத்துக்கள்
மன்னிப்பு மனுக்கோரும்

புரிதலால் அல்லவா
கோடையெனும் கொடிய
ஊடலின் பின்னரும்
பூமியும் வானும்
மழைக் கரத்தால்
கைகோர்த்துக் கொள்கின்றன.

புரிதலில் அல்லவா
பூக்களும் வண்டும்
பூமிக்கு வெளியே
புன்னகைத்துக் கொள்கின்றன.

அலையும் கரையும்
அடிக்கடி வந்து
அமைதிப்பேச்சு நடத்துவதும்

கல்லும் உளியும்
கதைக்காமலேயே
சிலைதந்து எம்மை
சிலாகிக்க வைப்பதும்

இலையை உதிர்த்தி
ஓராண்டு சென்றாலும்
காலத்திற்கு மரங்கள்
இளவேனில் கொடுப்பதும்

பூவை வீழ்த்தும்
தண்டுக்கு மரங்கள்
மீண்டும் மீண்டும்
மொட்டை முகிழ்ப்பதும்

முட்டியும் மோதியும்
யாத்திரையில் எறும்புகள்
முறைப்பாடு செய்யாமலே
முடிவுக்கு வருவதும் – இந்த
புரிதலால் அல்லவா!

காதலனாய் இருந்தாலும்
கணவனாய் இருந்தாலும்
காதலி மனைவி இரண்டுமே என்றாலும்
பெற்றோராய் பிள்ளைகளாய்
மற்றோராயிருந்தாலும்
புரிந்து கொள்ளுங்கள்
புன்னகை பூச்சொரியும்
சந்தோசம் சடங்கெடுக்கும்
புரிந்து கொள்ளுங்கள்.

# முக்குல (முக்குவ) அரசி உலகநாச்சி மண்முனை அவள் இராஜதானி

செல்வி.க.தங.கேஸ்வரி(பி.ஏ.தொல்பொருளியல் சிறப்பு)

## முன்னுரை

### முக்குவர் பற்றிய ஓர் தெளிவு

காலங்காலமாக முக்குவர் பற்றிய பல்வேறு கருத்துக்கள் பல பேராசிரியர்களாலும், அறிஞர்களாலும் முன் வைக்கப்பட்டன. முக்குவர் என்போர் யாழ்ப்பாணம் கீரிமலைக்கனித்தாய் உள்ள இடங்களில் மீன்பிடித் தொழிலைக் கொண்டவர்கள். சிலாபம், புத்தளம் பகுதிகளில் முத்துக்குளிப்பவர்கள் மீன்பிடித் தொழிலைக் கொண்டவர்கள். மட்டக்களப்புக்கு மீன்பிடித் தொழிலுக்காக வந்தவர்கள். மூழ்கி முத்தெடுத்ததால் முக்கியர் எனப்பட்டனர். தமது அறிவுக்கு எட்டியவகையில் சிலர் இத்தகைய கருத்துக்களை முன் வைத்தனர்.

இன்னொருபுறம் வேறுசிலர் முக்குவர் என்போர் குகன் வம்சத்தவர் எனவும் இந்தியாவில் பல இடங்களிலும் வாழ்ந்தவர்கள். கண்ணகி இட்ட சாபத்தால் மட்டக்களப்பில் வந்து குடியேறியவர்கள் எனக் கூறினர். வேறு சிலர் வங்கன், சிங்கர், கலிங்கர் என்ற முக்குலத்து வழி வந்தோர் என மட்டக்களப்பு மாண்மியத்தில் கூறப்பட்டதை ஆதாரமாக்க் கொண்டு கருத்து வெளியிட்டனர். இப்படி முக்குவர் பற்றிய தெளிவு தெளிவில்லாமலே கூறி கொண்டுள்ளனர்.

உண்மையில் முக்குவர் என்போர் யார்? இவர்களது பூர்வீகம் என்ன? மட்டக்களப்பு வரலாற்றில் முக்குவரது இடம் எத்தகையது என்பது பற்றிய விளக்கங்களை இக் கட்டுரையின் மூலம் தெளிவுபடுத்துவது நோக்கமாகும். ஒரிசா தேசத்திலிருந்து கலிங்க இளவரசி உலகநாச்சி மண்முனை வந்ததும் அவள் மண்முனை இராட்சியத்தை உருவாக்கியதும் மக்களிடையே வேரூன்றிப் போன கதை. அவள் தேவை ஏற்பட்ட போது பல தடவைகள் பல குடும்பங்களை அழைப்பித்துக் குடியேற்றினாள். அவர்கள் பல்வேறு சமுகத்தவராய் இருந்தாலும் அக்காலத்தில் முக்கியம் பெற்ற குடியினர் மூவர் அந்த முக்குலத்தோரின் பெயராலே முக்குலம் என வழங்கப்பட்ட உலகநாச்சியின் சமூகம் காலவோட்டத்தில் முக்குவர், முக்கியர், முற்குகர் என பல பெயர்களைப் பெற்றது.

முக்குலத்தவர்களால் ஏற்பட்ட சமூகம் முக்குவர் எனப்பட்டாலும் அக் காலத்து பல்வேறு சமூகத்தவரையும் உள்ளடக்கிய மக்கள் கூட்டம் முக்குவராயிற்று. உலகநாச்சியின் ஆட்சி பரந்து விரிந்து காணப்பட்டது. முக்குவர் என்ற பெயர் உலகநாச்சி ஆட்சிக்காலத்திலிருந்து ஏற்பட்டதாகும். உலகநாச்சி காலத்தில் மட்டக்களப்பு முக்குவதேசம் என அழைக்கப்பட்டது, என அறியமுடிகிறது. அப்போது மட்டக்களப்பு, மண்முனை, உன்னரசுகிரி என்ற மூன்று இராட்சியங்களில் பேர் பெற்றிருந்தன. இம்மூன்று இராட்சியங்களுக்கு இடையில் நெருங்கிய தொடர்பு இருந்தது.

உலகநாச்சியின் இராசதானியாக இருந்த மண்முனை என்ற பெயர் இன்றுவரை நிலைத்திருப்பதை இன்றைய நிர்வாகப் பிரிவுகளில் கண்கூடாகக் காணமுடிகிறது. மண்முனைப்பற்று, மண்முனை வடக்கு, மண்முனைமேற்கு, மண்முனை தென்

எருவில்பற்று, மண்முனைபோரதீவுப்பற்று என மண்முனன் இராட்சியம் இன்று வரை நிலை நாட்டப்பட்டுள்ளது. முக்கியமான விடயமாகும். இனி மண்முனை இராட்சியத்திற்கு முன்பிருந்த நிலையை சுருக்கமாக பார்த்து மண்முனை, உலகநாச்சி பற்றிய விரிவான விளக்கத்திற்கு செல்லலாம்.

மண்முனை இராட்சியம் பற்றிய ஆராட்சிக்கு முன்னர் மண்முனை இராட்சியம் என்பது எது? அதன் காலம் என்ன? மட்டக்களப்பு இராட்சியத்திற்கும் இதற்கும் இடையே காணப்பட்ட தொடர்பு அக் காலத்தில் இருந்த அரசியல் நிலைப்பாடு பற்றி சிறிது விபரித்தல் அவசியமானது. பண்டு உன்னரசுகிரி (உகந்தை) மட்டக்களப்பு, மண்முனை, ஆகிய மூன்று அரசுகள் ரோகண இராச்சியத்தில் முக்கியம் பெற்றிருந்தன. 1963க்கு முன்னர் கிழக் கிலங்கையில் மட்டக்களப்பு, திருகோண மலை என இரு மாவட்டங்கள் இருந்தன. இது வடக்கே வெருகல் முதல் தெற்கே குமனை வரை நீண்டு பரந்து இருந்தது. அதற்கும் முன் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் ரோகணை இராட்சியத்தின் பல இடங்களை உள்ளடக்கியதாகவும் கதிர்காமம் தொடக்கம் விந்தன வெல்லச, ஊவா பகுதிகளையும் உள்ளடக்கியதாக பெரியதொரு பரந்த பிரதேசமாக இருந்தது.1

தொல்பொருளியல் திணைக்கள ஆணையாளராக இருந்த டாக்டர் பரணவிதான 1970ல் வெளியிட்ட Insertions at Ceylon என்னும் தொல்பொருளியல் திணைக்களத்தின் பாரிய நூலிலே மட்டக்களப்பின் இடங்களை கதிர்காமம் பாணமை முதல் வெருகல் வரை உள்ள பிரதேசம் எனக் குறிப்பிட்டதோடு அவற்றை ஏழு பற்றுக்களாகவும் குறிப்பிட்டுள்ளார். அவை கோறளைப்பற்று, ஏறாவூர்ப்பற்று, விந்தனைப்பற்று, மண்முனைப்பற்று, வேகம்பற்று, சம்மாந்துறைப்பற்று, அக்கறைப்பற்று எனக் கூறியுள்ளதோடு இவை அனைத்தும் பிராமிக்கல் வெட்டுக்கள் காணப்படுமிடங்களாகும் எனவும்சுட்டியுள்ளர்.2 மட்டக்களப்பு என்ற பெயர் முதன் முதல் கண்ணகி வழக்குரையில் கூறப்பட்டுள்ளது. மட்டக்களப்பு இராட்சியம் என்பதுவும் தெற்கே மட்டக்களப்பு வாவி முடியுமிடமான சம்மாந்துறை, மலுக்கம்பிட்டி அட்டப்பள்ளம் போன்ற பிரதேசங்களை உள்ளடக்கியதாக காணப்பட்டுள்ளது. கிழக்கே மண்முனை இராச்சியம் அமைந்திருந்தது.

**முக்குவ தேசத்தின் தொன்மை**

இலங்கையின் கிழக்குக் கரையோரம் என்பதை பொத்துவில்லிருந்து காரைதீவு, கும்புறுமூலை, வாழைச்சேனை, வெருகல், சேருவிலை, குச்சவெளி வரை இடைப்பட்ட பிரதேசங்கள் எனப் பார்த்தால் இப்பிரதேசத்தில் பல சிற்றாறுகள் வந்து கடலில் சங்கமிக்கின்றன. இதே நேரம் குமரிக்கண்டம் எனப்பட்ட தமிழர் தாயகம் கடற்கோளில் மூழ்கியபோது எஞ்சிய நிலத்திணிவே ஈழம் என்பது வரலாறுகள் மூலம் அறியும் உண்மையாகும். கடலில் மூழ்கிப்போன குமரிக் கண்டத்திலே பஃறுழி ஆறு ஓடியது அதுவும் கடற்கோளால் மூடப்பட்டது.3

**"பஃறுழியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்**
**குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள**
**வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு"**

என்னும் சிலப்பதிகார அடிகளை நோக்கினால் பன்மலை அடுக்கம் (பலமலைகள்) பஃறுழி ஆறு (பலதுளிஆறு) என்பனவும் கடலில் மூழ்கிய பகுதியாகிய இலங்கையின் தென் கிழக்குப்பகுதியில் இருந்தன. எனக் கொள்ள முடியும். மூழ்கிய இடம் போக எஞ்சிய துணிக்கையாகிய ஈழத்தின் தென்

கிழக்குப்பகுதியே பண்டைய தமிழர் இராட்சியங்களாகும். இப்பிரதேசத்திலே உன்னரசுகிரி (உகந்தை) மட்டக்களப்பு, மண்முனை ஆகிய இராட்சியங்களும் தெட்சணாபதி எனப்பட்ட திருகோண மலையும் அமைந்திருந்தன. பண்டைய மட்டக்களப்பு இராட்சியம் என்பது சம்மாந் துறை, அட்டப்பள்ளம், மலுக்கம்பிட்டி போன்ற பகுதிகளை உள்ளடக்கி இருந்தது. இங்கு வரலாறு காட்டுகின்ற முதல் கலிங்க மன்னன் கூத்திகனாகும், கலிங்க மன்னனான இவன் காலம் முதல் இவனது பரம்பரையினர் பல நூற்றாண்டு காலம் வரை ஆட்சி செய்தனர். (கிமு. 200-கிபி 1200 வரை) இவன் 90 குடும்பங்களை அழைத்து படையாட்சி தலைவர்களாக்கி ஆட்சி செலுத்தினான் என வரலாறுகள் கூறு கின்றன.4 மட்டக்களப்பு மாண்மியம் இதனைத் தெளிவாகக் காட்டியுள்ளது. கூத்திகனுக்கு முன்னர் கதிர்காமஷத்திரியர், சந்தனகாம சிற்றரசர் போன்ற மேலும் பல தமிழ் சிற்றரசுகளும் இருந்துள்ளன. இவர்கள் அனைவரும் பாண்டியத் தொடர்புடைய சிற்றரசர்களிடம் கூத்திகன், சேனன் ஆட்சியை மகாவம்சம் கூறுகின்றது.

**மண்முனை இராட்சியத்தின் தோற்றம்**

மேலே கூறிய மட்டக்களப்பு இராட்சியம் போன்றே மண்முனை இராட்சியமும் தமிழ் மன்னர்கள் ஆட்சியிலே செழிப்புற்றது. மண்முனை இராட்சியத்தின் தோற்றம் உலநாச்சி எனப்படும் கலிங்க இலவரசியாலே ஏற்படுத்தப்பட்டது. கிபி 398ல் குணசிங்கம் மட்டக்களப்பை ஆட்சி செய்யும் போது இலங்கை மன்னன் மேகவர்ணன் ஆகும். இவ் மேகவர்ணன் ஆட்சியின் போது ஒரிசா தேசத்து மன்னன் குகசேனது புத்திரி உலகநாச்சி புத்த தந்தத்தையும் தம் முன்னோர் கைலையங் கிரியில் வைத்திருந்த லிங்கத்தையும் கொண்டு வந்தாள் எனவும் இவளுக்கு காடரந்த மண்முனை பிரதேசத்தை குணசிஙகன் மூலம் மேகவர்ணன் வழங்கி னான் என்பதுவும் மட்டக்களப்பு மாண்மியம் கூறும் செய்தியாகும்.5 மட்டக்களப்பு மாண்மியம் கூறும் செய்தி வருமாறு.

குணசிங்கன் மட்டக்களப்பை கலிபிறந்து மூவாயிரத்து ஐந்நூறும் வருடம் பரிபாலித்து வரும் காலம் கலிங்க ஒரிசா தேசத்தை அரசுபுரியும் குகசேனுடைய புத்திரி உலகநாச்சி என்பவள் கௌதம புத்தருடைய தசனத்தை எடுத்து தனது நெடுங்கூந்தலுக்குள் மறைவாய் வைத்துக் கொண்டு கைலயங்கிரியில் குகவம்சத்தான் முன் காலத்தில் எடுத்து வைத்த சிவலிங் கத்தையும் எடுத்தக்கொண்டு தனது சகோதரன் உலகநாதனுடன் படகிலேறி மணிபுரத்திலிறங்கி விஜய தூபத்தில் வந்து மேகவர்ணனைக் கண்டு குல கோத்திரம் விளக்கி புத்தருடைய தசனத்தைக் கொடுத்தாள். மகிழ்ந்த மேகவர்ணன் என்ன வேண்டுமெனக் கேட்டான். அவள் காடு செறிந்த குடிவாழ்வில்லா கிராமமொன்றைக் கோரினாள் மேகவர்ணன் மட்டக்களப்பை அரசு புரியும் குணசிங்கனுக்கு திருமுகம் வரைந்து மட்டக்களப்பு, உன்னரசு கிரி இவைகளின் காடு செறிந்து குடிவாழ்வில்லாத பதி ஒன்றைக் கொடுக்கும் படி அனுப்பி வைத்தான். குணசிங்கனும் திருமுகத்தை வாசித்து மட்டக்களப்புக்கு வடபால் உள்ள அம்பிலான்துறைக்கு அப்பால் மண்னேறி முனை காடு செறித்து இருந்தது. அவ் விடத்தை வெட்டி திருத்தி மாளிகை அமைத்து உலக நாச்சியை இருத்தினான்" இது மட்டக்களப்பு மான்மியம் கூறியுள்ளபடி இங்கே தரப்படுகிறது.

உலக நாச்சி பின்னர் ஒரிசா தேசத்துக்கு தம்பியை அனுப்பி குகன்

குடும்பம் நூறும் சிறைக்குடும்பம் முப்பதும் எடுப்பித்து தன் அருகாயிருத்தி அந்த இடத்தில் ஆலயமைத்து சிவலிங்கத்தை ஸ்தாபித்து வணங்கி வந்தாள். இன்னும் ஒரிசா நகரிலிருந்து அனேக குகன் குடும்பங்களை அழைத்து காப்பு முனைக்காட்டை அழித்துச் செப்பனிட்டு குடியேற்றி அப்பகுதிக்கு அரசியாக்கி மண்முனை என நாமம் சூட்டி வாழும் காலம் மண்முனைக்கு தென் பாகமுள்ள காட்டை அழிக்கும் போது திடகன் என்பவன் கொக்குநெட்டி மரத்தை வெட்டும் போது உதிரம் பாய்ந்தது. அதனை உலகநாச்சியிடம் அறிவித்தான் போய் பார்த்தபோது லிங்கமிருக்கக் கட்டு வடநாட்டு கொல்லடத்திலிருந்து பட்டர் மூவரை அழைப்பித்து பூசை புரியும்படி திட்டம் செய்தாள்.

உலகநாச்சி இவ்விதம் அரசு செய்து கொண்டு குணசிங்கனின் உடன் பிறந்தவனாகிய கிரசரன் என்பவனை மணந்து ஒரு புத்திரனையும், புத்திரியையும் பெற்று வாழ்ந்தாள் தந்தபுரத்திலிருந்து ஆரம் தொடுக்கும் குடிகள் பதின்மரை அழைத்து இரு கோயில்களுக்கு ஆரம் கட்டும் குடிகளை வகுத்தாள்.

மட்டக்களப்பு மாண்மியம் கூறுகின்ற இவ் உலகநாச்சி வரலாறு மகாவம்சம் மூலம் உறுதி செய்ய முடிகிறது. அதாவது மேகவர்ணன் ஆட்சியின் போது (கி.பி.301 - 308) பிராமணப் பெண்ஒருத்தி சிவலிங்கத்தையும் புத்தரது தசனத்தையும் கூந்தலுக்குள் மறைத்து வைத்துக்கொண்டு வந்ததாகவும் மேகவர்ணன் மட்டக்களப்பிலே காடர்ந்த ஒரு இடத்தை அவளுக்கு கொடுத்ததாகவும் மகாவம்சம் கூறுகிறது.6

உலகநாச்சி மேகவர்ணனால் வழங்கப்பட்ட காடார்ந்த பிரதேசத்தை வெளியாக்கி செப்பனிட்டு மாளிகை அமைத்தும் அதே நேரம் அனேக குகக்குடும்பங்களை ஒரிசா தேசத்திலிருந்து அழைத்து காப்பு முனைக்காட்டையும் அழித்து செப்பனிட்டு குடியேறி அப்பகுதிக்கு அரசியாகி மண்முனை என நாமம் சூட்டி இராஜதானி ஆக்கினாள். இதேநேரம் கோயில்குளம் லிங்கக் கோயிலை அமைத்தாள். கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தைக் கட்டுவித்தாள்.7 இவை அனைத்தும் முக்கியமான செய்திகள்.


ஆகவே மண்முனை இராட்சியம் என்பது இன்றைய தாழங்குடா, கோயில்குளம், மண்முனை போன்ற இடங்களை உள்ளடக்கியதுடன் வாவியின் மறுபுறமும் அமையப்பெற்றது என்பதே பொருத்தமானது. அம்பிலான்துறையை அண்மிய மண்ணேறு முனையை சுத்தப்படுத்தி மாளிகை அமைத்த அதே நேரம் காப்பு முனைக்காட்டு பிரதேசமும் சுத்தப்படுத்தி செப்பனிடப்பட்டு குடிகள் குடியேற்றப்பட்ட தகவலையும் அறிய முடிகிறது. முனைக்காடு, கொக்கட்டிச் சோலை, அம்பிலான்துறை, மணப்பிட்டி, தாந்தாமலை வரையுள்ள கிராமங்களும் உலக நாச்சியின் ஆட்சியில் இருந்துள்ளன. அதாவது வாவியின் இருபுறமும் உலக நாச்சியின் இராட்சியம் பரந்திருந்துள்ளது.8 கோயில்குளத்திலே பாரிய ஆலயம் அமைத்துள்ளாள் அவளது முக்கிய வழிபாட்டுத் தலமாக கோயில் குளம் லிங்கக் கோயில் இருந்துள்ளது. அதே நேரம் கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் கோயிலும் அமைப்பதற்கு கொத்தனாரை தருவித்துள்ளாள். தான்தோன்றிஸ்வரர் அவளது வழிபடுமிடமாகவும் இருந்துள்ளது. ஆகவே உலகநாச்சியின் அரசிருக்கையையும் நிர்வாகமும் பரந்திருந்தது.

-தொடரும்-



"நாளுக்குகொரு பயத்தை வெல்லாதவன் வாழ்க்கை முதல் பாடத்தையே கல்லாதவன்."

# அறிவுக்கதிர்



செ.பவானி

## இரட்டைக் காப்பியங்கள்

சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக்காப்பியங்களாகும் சிலப்பதி காரத்தின் தொடர்ச்சியாக மணிமேகலை அமைவதால் இவ்வாறு அழைக்கப்படுகின் றது. இவை இரண்டும் ஐம்பெரும் காப்பி யங்களில் உள்ளடங்குகின்றன.

## சிலப்பதிகாரம்

- சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் உருவாக்கப்பட்டது.
- 5021 அடிகளில் கோவலன், கண்ணகி வாழ்வைக் கூறும் காப்பியமாகும்
- வெண்பா, அகவற்பா, கலிப்பா என்ற பாவகைகளில் இது ஆக்கப்பட்டது.
- இக்காப்பியம் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று பெரிய காண்டங்களையும் 30 காதைகளையும் கொண்டது.
- இசைக் கலையும் நாட்டியக்கலையும் இணைந்து வளர்ந்த வரலாற்றைக் கூறும் காவியம் சிலப்பதிகாரம்.
- இதில் பத்தினித் தெய்வமாக சித்தரிக்கப்பட்டவர். கண்ணகி
- புகார்க்காண்டத்தில் உவகைச் சுவையும், மதுரைக் காண்டத்தில் அவ லச் சுவையும், வஞ்சிக் காண்டத்தில் வீரச்சுவையும், மிகுந்திருப்பதைக் காணலாம்.
- இளங்கோவடிகள், மாதவி 11 வகையான ஆடல்களில் வல்லவர் எனக் கூறுகின்றார்.
- சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள கடவுளர்கள் சிவன், திருமால், கொற்றவை, இந்திரன், முருகன் போன்றோர்களாவர்.
- குறைவான பெண் பாத்திரங்களை கொண்ட காப்பியம் இதுவாகும்.
- பரத்தையான மாதவிக்கு பத்தினியின் உயர்வைக் கொடுத்து புரட்சி செய்தமையால் இதனை புரட்சிக் காவியம் எனவும் போற்றுவர்.
- இங்கு அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாவது, பொருள் உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தல், ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்ற மூன்று பொருளையும் வலியுறுத்து கின்றது.
- காப்பியத்தில் தீயவன் இல்லை யென்றால் போராட்டம் நடக்காது அதனால் ஊழ்வினைக்கு தீயவனின் தகுதியளித்துள்ள திறம் வியக்கத் தக்கது.

## மணிமேகலை

- இந்நூலின் ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்.
- இக்காப்பியம் பௌத்த மதக் கொள்கையை கூறும் நூல்.
- இது அகவற்பாவால் அமைந்த காப்பியம்.
- காவியத்தலைவி மணிமேகலையின் பெயரே நூலின் தலைப்பாக கொண்ட முதல் நூல்.

- தமிழில் தோன்றிய முதல் சமயக் காப்பியம் இதுவாகும்.
- 30 காதைகளில் கோவலன் - மாதவி மகள் மணிமேகலையின் வரலாற்றைக் கூறும் நூல்.
- பரத்தையின் மகளை காப்பியத் தலைவியாகக் கொண்டு புரட்சி செய்யும் முதல் காப்பியம் மணிமேகலை.
- இக்காப்பியம் கொலை, களவுகள், காமம் போன்றவற்றால் வரும் தீமைகளை எடுத்துக் கூறுகின்றது.
- புத்த மதத்தை விளக்கவந்த நூலாக இருந்த போதிலும் பல சீர்திருத்தக் கருத்துக்களை இதில் சாத்தனார் கூறத் தவறவில்லை.
- பரத்தை ஒழிப்பு, மது ஒழிப்பு, பசி ஒழிப்பு, சிறை ஒழிப்பு போன்ற நல்ல சீர்திருத்தங்களை விரிவாக விளக்குகின்றார் ஆசிரியர்
- இந்நூல் பௌத்தம் பரப்ப தோன்றியதே யானாலும் எண் சுவையும் இயற்கை வருணனையும் இணைந்த பொதுக் காப்பியமாக பொலிவுறுகின்றது.
- மானுடருக்கு இம்மையிலும், மறுமையிலும் நன்மை செய்ய வல்லது அறமே, இவ்விளமைப்பருவமும், உடம்பும் நிலையில்லாதவை, பெரும் செல்வமும் நிலையற்றது. வானுலகை புதல்வர்களால் பெற்றுத்தர முடியாது. அறம் செய்ய வேண்டும் என்பதை சாத்தனார் பல இடங்களில் வலியுறுத்துகின்றார்.
- திருக்குறளை பொருளுரை என்றும், திருவள்ளுவரை பொய்யில் புலவர் என்றும் முதன் முதல் காப்பியத்தில் குறித்துக்காட்டிப் போற்றிய காப்பியம் மணிமேகலை ஒன்றே.
- மணிமேகலை என்பது காப்பியத்தின் பெயர் இதற்கு மணிமேகலை துறவு என்னும் பெயரும் உண்டு.

## உலக நாடுகளும் அந்நாட்டு தலைவர்களும்

சி.டிலோசனா

- இலங்கை - மஹிந்த ராஜபக்ஷ
- ஆப்கானிஸ்தான் - ஹமிட் கர்சாய்
- ஆர்ஜென்டீனா - கிறிஸ்ரியனா
- அவுஸ்திரேலியா - ஜூலியர் கலார்ட்
- ஒஸ்திரியா - ஹெய்ன் பிஷ்வர்
- பஹ்ரேன் - ஹமாட் இன் இஷானுல் கலிபா
- பூட்டான் - ஜூக்மி கெஷார
- பிரேசில் - டில்மா ருசெல்ப்
- கனடா - ஸ்டிபன் ஹாபர்
- கியுபா - ராவுல் கெஸ்ட்ரோ
- சீனா - ஹூ ஜின்தாவோ
- எகிப்து - ஹொன்சி முபாரக்
- இந்தியா - மன்மோஹன்சிங்
- பிரான்ஸ் - நிக்கலஸ் சர்கோசி
- ஈரான் - மொஹமட் அஹமட் நிஜாட்
- ஜப்பான் - டாரோ எசோ
- சிங்கப்பூர் - லீ சியேன் லூங்ஸ
- அமெரிக்கா - பராக் ஒபாமா
- இத்தாலி - ஜோர்ஜியோ நெப்போலிடனு
- பங்களாதேஷ் வேறக் ஹஷினா



"மனிதனின் ஆசை எப்போதும் குறைவதில்லை. அது மனத்தின் பசி"

# திரைக்குப் பின்னால்

– க.காண்டீபன் –

"காலை எழுந்திருத்தல், காணாமலே புணர்தல், உற்றாரோடுண்ணல், உறவாடல், மாலை குளித்தல், மனை புகல்" என்பவற்றை நாளார்ந்த இலக்கணமாகக் கொண்ட கூட்டம் அது. காலையில் வழமையாக கிடைக்கும் ரொட்டியும் சாம்பாரும் அன்றில்லை. காரணம், நானாவின் கடை பூட்டப் பட்டிருந்தது. மிகுந்த ஏமாற்றத்துடனேயே அண்ணாச்சியின் கடைப்பக்கம் திரும்பிய அவை, கிடைத்த பாண் துண்டுகளுடன் தமது வயிற்றை நிரப்பிக் கொண்டன. சற்று நேரம் வட்டமடித்து விட்டு வழமையாக இளைப்பாறும் வெள்ளைப் பாலத்திற்கு அருகில் உள்ள கத்தாமரத்திலே வந்தமர்ந்தன. அண்மைக் காலமாக ஊரில் நடந்த தீவிர "டெங்கு" பிரச்சாரம் காரணமாக அவை அவ்விடத்தில் சேர்ந்து பேசி சில வாரங்களாவது இருக்கும்.

நீண்ட இடைவெளிக்குப் பின்பு அவை அன்றுதான் கூடின. "என்னடி செல்லாத்தா! உன்ட ஏரியாவுல ஏதாவது புதிய கூத்துக்கள் நடந்ததா? "இந்த ஓரிரு கிழமையா ஊர் குசும்புகள் ஒண்டையும் அறியல...." என்றார் கொண்டையார்.

"அது என்னத்தப் பேசிறது கொண்டையார். நாளும் ஒரு குசும்பு. போன திங்கள்கிழமை பள்ளிப் பொடிச்சுகள் சிலர் முழுகாம இருக்காங்களாம் என்று ஊரில பெரிய புதினம் பாருங்கோ."

"என்னடி...!!"

"சும்மா போங்க.... கொண்டையார். அதுதான் அம்மாவாகப் போறாங்களாம்."

"வயது....!"

"என்னத்த... ஒரு பதினஞ்சு, பதினாறு.... இருக்கும்."

"அப்ப, அப்பன்..."

"அதைப் பற்றித்தான் பெரிய குழப்பமாம், பொலிஸ் விசாரணை செய்திட்டு இருக்காம்." "இன்னொரு முக்கிய விசயம்..." என்று கொண்டையாருக்கு பக்கத்திலே சென்று ஏதோ குசுகுசுத்தா செல்லத்தா.

"அப்படியாடி....! 'வல்லவன்ர பம்பரம் மண்ணிலும் ஆடும்." என்று சும்மாவா சொல்லியிருக்காங்க." என்றார் கொண்டையார்.

"எங்கயெடி, அத்திவாரம் போட்டதுகள்?" என்று மீண்டும் துருவினார் கொண்டையார். "நாகரிக மோகத்தால



"சும்மா இருப்பதைவிட பயனற்ற முயற்சியாவது செய்வது சாலச்சிறந்தது."

திக்கு முக்காடித் திரியும் இந்தக் கூட்டம், ஏதோ திரை போட்ட பெட்டிக்குள்ள இருக்கிற ரி.விப் பெட்டிய ஜோடி ஜோடியா பாக்கப் போக, இண்டைக்கு இதிகளப் பார்த்து ஊரே கைகொட்டிச் சிரிக்கிது."

"அடிசக்க... என்னடி இது? நேத்து என்ர ஊரிலயும் இந்த ரி.வி பெட்டிய இரண்டு பொடிச்சுகள் பார்த்த தாகச் சொல்லி பெரிய ரகளை, அடிபிடி, கல்லெறியும் நடந்ததாக காத்துவாக்கில அடிபட்டது." என்று தனது ஊர் புதினத் தைத் தொடர்ந்த கொண்டை யார், "பிஞ்சில கருகிற இளசுகளை நினைச் சாத்தான் மனசு சற்று கனக்குது" என்றார்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டு தண்ணீரிலே விளையாடிக் கொண்டிருந்த நீர்க் காக்கையார் மேலே வந்து, "இஞ்ச பாருங்கோ, தாராளம யமாக்கலில பழியப் போட்டுத்து பிழப்பு நடத்திற கூட்டமது ஏகாதிபத்தியத்த நிறுவ திரைமறைவில நடக்கிற சூக்குமங் கள் என்பதை அதுகள் அறியல பாருங்கோ" என்றார்.

"புதியன புகுதலும் பழையன கழிதலுமே வாழ்க்கை எனக்கூறி, புதுக் கவிதை படைக்கும் கூட்டமது நல்ல காலம், எமக்கு ஆறறிவு தராத கடவுளுக்கு ஒரு கும்பிடு. 'கெடுவான் கேடு நினைப்பான்...." எனத் தத்துவம் பேசிய படியே செல்லாத்தா, நிமிர்ந்து நிற்கும் சங்கிலியனின் நடுமண்டையில் நச்சென்று எச்சத்தைப் போட்டுவிட்டு பறக்கலானாள்.


**2012ம் ஆண்டு கதிரவன் சஞ்சிகை இரண்டு மாதத்திற்கொரு இதழாக வெளிவரவுள்ளது.**

ஒரு வருட சந்தா (தபால் செலவு உட்பட) 400/=

| 2010ம் ஆண்டு விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| பின் அட்டை விளம்பரம் | 3000/- |
| பின் அட்டை உட்புறம் | 1500/- |
| முன் அட்டை உட்புறம் | 1500/- |
| உட்பகுதிகள் | 1000/- |

காசோலைகள் காசுக்கட்டளைகள் த. இன்பராசா என்று பெயரிடுக.
கதிரவன் வரவிற்கு உதவிடும் கரங்கள் விரும்பிடும் தொகையை ஆசிரியிடம் வழங்கலாம். காசுக் கட்டளை
- உப அஞ்சலகம் -
புதுக்குடியிருப்பு EP




"இதயத்தைச் சுத்தப்படுத்திவிட்டு இறைவனைக் கூப்பிடு."

- தம்பிலுவில் ஜெகா -

# ஔவை



முத்தமிழ் வளர்த்த முதுபெரும் புலவர்களுள் சித்தம் கவர்ந்த பெண்பால் புலவர் சிலரே. அவர்க ளுள் தாரகை நடுவே தண்மதி போல இலக்கிய வானில் இன்றும் பிரகாசிப்பவர் ஔவையார் ஒருவரே யாவார். ஔவை எனும் பெயரில் பல புலவர்கள் வாழ்ந்ததாக கூறப்படுகின்றது புராணக்கால ஔவை, சங்ககால ஔவை, சோழர் கால ஔவை என காலத்துக்குக் காலம் காலச்சூழலுக்கு ஏற்றவாறு ஔவை எனும் பெயரில் பெண் பாற்புலவர்கள் இலக்கியம் படைத்துள் ளார்கள். இவர்களுள் பெரும்பாலா னோரால் அறியப்பட்ட ஔவை முருக னிடம் நாவற்பழம் பெற்ற புராண கால ஔவையார் ஆவார்.

ஒருமுறை முருகக் கடவுள் ஔவையாருக்கு சமயதத்துவத்தைப் புகட்ட விரும்பினார். இதற்காக ஔவை நடந்து வரும் வழியிலுள்ள நாவல் மரமொன்றில் அமர்ந்து கொண்டார். ஔவை களைப்பை நீக்க அந்த மரத்தடியில் களைப்பாறினார். மரத்தின் மேலிருந்த முருகனோ கீழே இருந்த ஒவையைப்பார்த்து உரையாடும் போது அவர் சுட்டபழம் கேட்க முருகனோ நன்றாகக் கனிந்த நாவற்பழங்களைக் கொடுத்து ஞானத்தைப் போதித்தார். இந்த சம்பவம் புராணக்கதையிலுள்ளது.

சங்ககால ஔவை அன்பு, வீரம், அரசியல், மதிநுட்பம், தமிழ்ப்புலமை யாவற்றிலும் சிறந்து விளங்கினார். இதனால் மன்னர்கள் மத்தியில் ஔவைக்கு மதிப்பும், மரியாதையும் மிகுந்திருந்தன. எடுத்துக்காட்டாக அதியமான் நெடுமா னஞ்சி எனும் மன்னன் ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்த சம்பவத்தினை கூறலாம்.

வேடுவத்தலைவன் ஒருவன் மலை உச்சியிலிருந்து பெறப்பட்ட கிடைத்தற்கரியதும், நீண்ட ஆயுள் தர வல்லதுமான நெல்லிக்கனியொன்றைப் பெற்றான். அதை உண்ணாது நெடுமா னஞ்சி மன்னனுக்கு கொடுக்க வேண்டு மென அவாக் கொண்டான். அதைப் பெற்ற மன்னனோ அக்கனியை தானுண் ணாது தமிழை வாழவைக்கும் ஔவைக் கும் கொடுப்பதே சாலப் பொருத்தமானது எனக் கருதி ஔவைக்கே கொடுத்தான்.

இன்னுமொர் முறை அதியமான் மன்னனுக்கும், தொண்டமான் மன்னனுக் கும் கடும் பகை ஏற்பட்டது. அப்பகையின் காரணமாக இருவரும் போர் செய்வதென முடிவெடுத்தனர் ஔவையோ போரை விரும்பவில்லை. அதியமான் மன்ன னுக்காக தொண்டமான் மன்னனிடம் தானே தூது சென்று, பண்புடன்பேசி, போரின் அவலங்களை விளக்கி போரைத் தடுத்து நிறுத்தினார்.

இச்சம்பவம் புறநானூறு என் னும் நூலில் 95ஆம் பாடலில் காணலாம். இதுபோல் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு எனும் இலக்கி யங்களில் ஔவையாரின் 59 பாடல்கள் உள்ளன.

சோழர் கால ஔவை தமிழ்ப்பு லமையும், தெய்வீகத்தன்மையும் கொண் டவராகத் திகழ்ந்தார். இவர் விநாயகர்

மீது அளவிலாப்பக்தி கொண்டவர் தமிழ் மீது கொண்ட தீவிர காதலால் வினாயகரை விழித்து "துங்கக் கரி முகத்துத் தூமணியே நீ எனக்கு சங்கத்தமிழ் மூன்றும் தா" என வேண்டினார். இவரின் தெய்வீகத் தன்மைக்கு எடுத்துக்காட்டாக கீழ் வரும் நிகழ்வினைக் கூறலாம்.

ஒரு முறை மன்னன் புலவர்களிடையே போட்டி ஒன்றினை ஏற்பாடு செய்தான். பந்தல் ஒன்றினை அமைத்து பொற்காசுகள் நிறைந்த கண்களைக் கவரும் வண்ணப்பைகள் நான்கினை அதில் தொங்க விட்டான். எப்புலவரின் பாடலுக்கு பொற்கிழி தானாக அறுந்து வீழ்கின்றதோ அப்புலவருக்கே அது பரிசாக வழங்கப்படும் என விதிமுறை கூறினான். அதன்படி பல புலவர்கள் பாடித்தோற் றார்கள். ஆனால் ஒளவையார் பாடிய ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு பொற்கிழியும் அறுந்து வீழ்ந்தது. அவரின் தெய்வீகத்தன்மையே இதற்குக் காரண மாகும். அவர் பாடிய பாடல்களுள் ஒரு பாடல்.

**"ஆர்த்த சபை நூற்றொருவர் ஆயிரத்**
**தொன்றாம் புலவர்**
**வார்த்தை பதினாயிரத்தொருவர் ~ பூத்தமலர்**
**தண்தாமரைத் திருவே தாதா கோடிக்**
**கொருவர்**
**உண்டாயின் உண்டென்று அறு"**

சோழர்காலப் புலவரான ஒளவைக்கும் ஒட்டக்கூத்தர் எனும் புலவருக்கும் அடிக்கடி வாக்குவாதம் ஏற்படும். கூத்தருக்கு வித்துவச் செருக்கு அதிகம். இவரின் செருக்கை அடக்க நினைத்த ஒளவை ஒட்டக்கூத்தரிடம் சந்திரனைக் குறிக்கும் மூன்று வேறு பெயர்கள் வரக்கூடியதாக அச்சொற்கள் மூன்றும் வெவ்வேறு கருத்தைத் தரக் கூடியவாறு பாடல் இயற்றும்படி பணித்தார். ஒட்டக்கூத்தரோ அவசரத்தில் 'மதி' எனும் சொல்லை இரண்டு இடங்களில் மட்டும் வைத்துப்பாடி விட்டார். உடனே ஒளவை அவரைப் பார்த்து 'ஒட்டா ஒருமதி கெட்டாய்' என வசை பாடினார். இக்கால ஒளவையே பந்தனந் தாதி, நன்னூற் கோவை, தனிதானப்பத்து, அசதிக் கோவை, ஞானக்குறள், விநாயகர் அகவல் ஆகிய நூல்களையும் எழுதினார். இவைதவிர ஆத்திசூடி கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை போன்ற நூல்களும் ஒளவையாரால் பாடப்பட்டவையே.

மேற்கூறப்பட்ட மூன்று ஒளவைகளை விட இன்னும் ஒளவை இருந்ததாகக் கூறப்படுகின்றது. பழந்தமிழ் அறிஞரான உ.வே.சாமிநாத ஐயரின் கூற்றுப்படி ஆதி பகவன் இருவருக்கும் ஏழுபிள்ளைகள் பிறந்தனர். அவர்களுள் ஒருவரே ஒளவை ஆவார். 'திருவள்ளுவ நாயனார்' சரிதம் எனும் நூலில் வள்ளுவரின் சகோதரியே ஒளவை எனும் கருத்தும் செப்பப்படுகின்றது. ஒளவையின் சிறப்புப்பற்றி தண்டாயுதபாணி சுவாமிகள் "புலவர் புராணம்" எனும் நூலில் பாடியுள்ளார். இந்தியாவில் உள்ள தஞ்சை மாவட்டத்திலும், குமரிமாவட்டத்திலும் ஒளவைக்கு ஆலயங்'கள் உள்ளன. இதிலிருந்து ஒளவையார் ஒருவர் அல்லர். ஒளவை எனும் பெயரில் பல புலவர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

# கதிரவனின் வாசகர்

**"கதிரவன்" கதிர் பற்றிய வாசகர்களின் கருத்துக்கள், விமர்சனங்கள், கதிரவனின் வாசகர் பக்கத்தில் எதிர்பார்க்கப்படுகின்றன.**

கதிரவன் கதிர் - 08 கிடைக்கப்பெற்றேன் நன்றி இலக்கியச் சுவையுடன் நாட்டாரியல் பாடல்களை திரு.எஸ்.எதிர்மன்னசிங்கம் தந்திருக்கிறார் இதுபற்றிய விரிவான கட்டுரைகளை அவர் தரவேண்டம்.

"ஆலமரம்" தந்த கதிரவன் ஆழமான கருத்துள்ள சிறுகதைகளை படைக்க எனது வாழ்த்துக்கள்.

முனைவர் மு.இளங்கோவனின் பூராடனார் பற்றிய கட்டுரை மிக விபரமாகவும், அருமையாகவும் இருந்தது இவ்வளவு பெரிய இலக்கியப்பணி செய்த மனிதர் பற்றி அறிந்துகொள்ள உதவிய கதிரவனுக்கு எனது பாராட்டுக்கள்.

மற்றும் பூக்குடிச்சான் இதயத்தில் ஒருவகை சோகத்தை விதைத்துவிட்டது. வேதமூர்த்தியின் "பாண்டவர்க்காய் முயலும் பரந்தாமன்" நாடகம் மொழி நடையில் முதன்மையிடம் பிடிக்கின்றது மொத்தத்தில் கதிரவனின் ஒளிவீச்சு அபாரம்.

**ஷெல்லிதாசன்**
**11/6, சென்யூட் லேன்,**
**பாலையூற்று,**
**திருக்கோணமலை.**

## கதிரவன் சஞ்சிகை (கதிர் 08) பற்றிய சில குறிப்புக்கள்

ஆக்கத்தை எழுதியவர் பெயர் மிகச்சின்ன எழுத்தில் அமைந்திருப்பது பொருத்தமேயில்லை தலைப்பிற்கு ஏற்ப இதுவும் ஓரளவு பெரியஎழுத்தில் அமையவேண்டும். முனைவர் இளங்கோவின் "ஈழத்துப்பூராடணர்" பற்றிய கட்டுரை பாராட்டத்தக்கது. செய்திக்கதிர்ப்பகுதியை சேர்த்திருப்பதற்கு நன்றி.

**இரா.நாகலிங்கம்**
**அன்புமணி.**

**ஆக்கபூர்வமான விமர்சனத்தினை ஊக்கப்படுத்தும் பரிசுப் பொதிகளை The Winners அமைப்பு வழுங்கவுள்ளது. கதிரவன் பற்றிய விமர்சனக் கருத்துக்களை அனுப்புங்கள் அடுத்த இதழில் சிறந்த விமர்சனத்திற்கு பரிசு காத்திருக்கின்றது.**

## கதிரவன் புலமைத்தேர்வு

தி.நரகநாதன் (ஆசிரியர்)

### சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன
   1. ஐம்புலன் 2. ஐம்பொறி 3.ஐம்பூதம் 4. பஞ்சகௌவியம்
2. பின்வருவனவற்றில் ஊன் உண்ணி எது?
   1. பசு 2. ஆடு 3. புலி 4. மான்
3. "இராவணன் இறுமாப்புக் கொண்டான்" இறுமாப்பு என்பதன் ஒத்தகருத்துச் சொல் எது?
   1. மாறு வேடம் 2. தைரியம் 3. அகங்காரம் 4. பலசாலி
4. "இடுக்கண் வரும்போது காத்தல் வேண்டும்" இதில் இடுக்கண் என்பதன் எதிர்க்கருத்துச் சொல் எது?
   1. துன்பம் 2. அழகு 3. இன்பம் 4. இரக்கம்
5. சுப்பிரமணிப் பாரதியார் வாழ்ந்த ஊர் எது?
   1. இராமேஸ்வரம் 2. எட்டயபுரம் 3. தமிழ்நாடு 4. களனி
6. மிக வேகமாக எரிபற்று நிலையுடைய திரவம்
   1. மண்ணெண்ணை 2. டீசல் 3. பெற்றோல் 4. தார்
7. இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் எத்தனை ஆண்டிற்கு ஒரு தடவை நடைபெறுகின்றது.
   1. 5 2. 3 3. 6 4. 4
8. போர்த்துக்கீசர் இலங்கையைக் கைப்பற்றிய ஆண்டு எது?
   1. 1805 2.1505 3.1815 4.1796
9. **"கை கொடுத்தல்"** என்னும் மரபுத் தொடர் உணர்த்தும் கருத்து எது?
   1.காப்பாற்றுதல் 2. உதவுதல் 3. பாதுகாத்தல் 4. கேட்டல்
10. தானும் அனுபவியாது பிறருக்கும் கொடாது பணத்தை சேமித்து வைப்பவன்.
    1. வள்ளல் 2.கொடையாளி 3. உலோபி 4. துரோகி
11. ஒளி எப்போதும்
    1. வெள்ளை நிறமாகும் 2. சூரியனில் இருந்து கிடைக்கும்
    3. நேராகப் பயணம் செய்யும் 4. குறுக்காக பயணம் செய்யும்
12. மின் சோடனை ஒன்றில் நீலம், சிவப்பு, பச்சை, நீலம் எனத் தொடராக மின்குமிழ்கள் எரிந்தன. அதில் 28ஆவது மின்குமிழ் பச்சை நிறமாக இருந்தது. ஆகவே அத்தொடரின் முதலாவது மின்குமிழ் என்ன நிறமாகும்.
    1. பச்சை 2. நீலம் 3. சிவப்பு 4. எதுவுமில்லை.
13. பின்வருவனவற்றில் பறக்க முடியாத பறவை எது?
    1. கோழி 2. பெண்குயின் 3. காகம் 4. மைனா
14. தச்சன் பயன்படுத்தும் உபகரணம் அல்லாதது.
    1. சுத்தியல் 2. சீவுளி 3. சந்தடக்கி 4.அவதாரு

15. இலங்கையின் முதலாவது ஜனாதிபதி யார்?
   1. ஜே.ஆர்.ஜெயவர்த்தன 2. வில்லியம் கொபர்லாப
   3. ஆர். பிறேமதாச 4. D.P.விஜயதுங்க

16. விவசாயிகளின் தோழன் யார்?
   1. மரம் 2. நீர் 3. சூரியன் 4. மண்புழு

17. மேட்டு நிலக் களை எது?
   1.மொண்டி 2. கோழிச்சூடான் 3. குப்பைமேனி 4. கோரை

18. மாலாவிடம் 20 பூக்களுள்ளன அதில் 1/4 பங்கை அவளது தங்கைக்குக் கொடுத்தாள். எனின் அவளிடம் மீதியாக உள்ள பூக்கள் எத்தனை
   1.5 2.10 3.15 4.20

19. 60.ன் 2/3 பங்கு எவ்வளவு.
   1.30 2.20 3.40 4.10



20.பின்வருவனவற்றில் ஊர்வன எது?
   1.நாய் 2.பல்லி 3.பன்றி 4.தவளை

21. ஒரு முறை தவறு செய்த அனுபவம் அடுத்த முறை அத்தவறைச் செய்யாது பாதுகாக்கும் இதற்குப் பொருத்தமான பழமொழி
   1. கெடுவார் கேடு நினைப்பார்
   2. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா
   3. சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.
   4. பட்டகாலிலேயே படும். கெட்ட குடியே கெடும்.

22. நீரில் மிதந்து சென்று பரவும் வித்து எது?
   1. மரமுந்திரி 2. மதுரை 3.பலா 4.வேம்பு

23. சந்தர்ப்பங்கள் சாதகமாக உள்ள வேளையில் காரியங்களை செய்து விட வேண்டும். இதற்கு பொருத்தமான பழமொழி.
   1. காற்றுள்ள போதே தூற்றிக்கொள் 2. ஆற்றிலே கரைத்த புளி போல
   3. ஆழமறியாமல் காலை விடாதே 4. ஆரியக் கூத்தடினாலும் காரியத்தில் கண்ணாயிரு

24. இலங்கையின் தரச் சான்றிதழ் எது?
   1.ISO 2.SLS 3.SSL 4.SLM

25. கதிரை ஏறு குதிரை ஏறு என்பதன், இரகசியக் குறியீடாக அமையக்கூடியது
   1.  2. 
   3.  4. 


26. இலங்கையின் தேசிய கொடியிலுள்ள பச்சை நிறம் எதைக் குறிக்கிறது.
   1. வீரம் 2. சிங்களவர் 3. தமிழர் 4. முஸ்லிம்கள்

27. இவ்வரிப்படம் மூலம் குறித்துக் காட்டக் கூடிய மூன்று சொற்கள் எவை?
   1.அண்ணண், தம்பி, அம்மா 2. பழங்கள், அப்பிள்பழம், தோடம்பழம்
   3. அடிமட்டம், பேனா, பென்சில்
   4. கார், வேன், பஸ்





"ஆயிரம் வருடம் மௌனமாக நின்ற மரம் விழும்போது காடே அதிரும்படி செய்துவிடும்"

28.  இவ் உருவில் உள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை

1.2 2.4 3.5 4.3

29. மூலிகைத் தாவரம் அல்லாதது எது?

1. கற்பூரவள்ளி 2.வேம்பு 3. கற்றாளை 4.வேம்பு


30. H5,N, வைரசுகளால் பரவும் காய்ச்சல்

1.மலேரியா 2. சிக்கன்குன்னியா

3. பன்றிக்காய்ச்சல் 4. பறவைக்காய்ச்சல்

31. எவ்விடத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமொ அவ்விடத்தில் அவ்வாறு நடந்து கொள்பவன்

1. அறிவிலி 2. விவேகி 3. முட்டாள் 4. தூதன்

32. 


இவ்வுருவில் ஒரு சதுரமும் அரை வட்டமும் காட்டப்படுகிறது அதன்படி இவ்வுருவின் சுற்றளவு.

1.20cm 2.28cm 3.32cm 4.24cm

33. பின்வரும் வித்துக்களில் கடினமான வித்துறையைக் கொண்ட வித்து எது?

1. பலா 2. மா 3.பயற்றை 4. தோடை

# கதிரவன் புலமைத்தேர்வு - 07

**முடிவுத் திகதி -25.11.2011**

பெயர் :- ..................................................................................

முகவரி :- ..................................................................................

..................................................................................

பாடசாலையின் பெயர் :- ..................................................................................

..................................................................................

இப்பகுதியை வெட்டி விடைகளை எழுதி, கடித உறைக்குள் வைத்து அனுப்பவும் (ஆ-ர்)

34. சிறந்த வித்தொன்றின் பண்பாக அமையக் கூடியது.
1. பெரிதாக இருத்தல் 2. நிறம் மாறியிருத்தல்
3. நன்கு காய்ந்திருத்தல் 4. நன்கு முதிர்ந்திருத்தல்.

35. நவீன கணனி உருவாக்கத்திற்கு வழி காட்டும் பொறி எப்போது கண்டுபிடிக்கப்பட்டது?
1.1896 2.1833 3.1906 4.1836

36. நாக்கு இல்லாத பிராணி பின்வருவனவற்றில் எது?
1. உடும்பு 2.முதலை 3. தவளை 4. பாம்பு

37. புதிய நாணயத்தாள்களில் மன்னம்பிட்டி பாலம் காணப்படும் தாள் எது?
1.ரூ.20 2.ரூ.50 3.ரூ.100 4.ரூ.500

38. இலவசக் கல்வியின் தந்தை யார்?
1. C.W.W.கன்னங்கரா 2. ஆனந்தகுமாரசுவாமி
3. சேர் பொன் இராமநாதன் 4. ஜயத்திலக்க

39. வீட்டுத் தோட்டங்களில் பிராணிகளை வெருட்ட பயன்படுத்தப்படும் பொருள்.
1.நிறச்சாயம் 2. வெகுளி 3. தகரம் 4. படங்கள்

40. முதல் எழுத்துக்களின் தொகை
1.12 2.18 3.216 4.30

**கதிரவன் புலமைத்தேர்வு - 06 வெற்றிபெற்றோர்.**

**ந.தனுசியா, ம.கேதுஜா, வ.தேசிகா**

## புலமைக்கதிர்

**விடைகளை எழுதி அனுப்புங்கள்**

**(முதல் மூன்று வெற்றியாளர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | ................ | 11 | ................ | 21 | ................ | 31 | ................ |
| 02 | ................ | 12 | ................ | 22 | ................ | 32 | ................ |
| 03 | ................ | 13 | ................ | 23 | ................ | 33 | ................ |
| 04 | ................ | 14 | ................ | 24 | ................ | 34 | ................ |
| 05 | ................ | 15 | ................ | 25 | ................ | 35 | ................ |
| 06 | ................ | 16 | ................ | 26 | ................ | 36 | ................ |
| 07 | ................ | 17 | ................ | 27 | ................ | 37 | ................ |
| 08 | ................ | 18 | ................ | 28 | ................ | 38 | ................ |
| 09 | ................ | 19 | ................ | 29 | ................ | 39 | ................ |
| 10 | ................ | 20 | ................ | 30 | ................ | 40 | ................ |

**முகவரி**
ஆசிரியர்
கதிரவன்
புலமைக்கதிர் - 07
புதுக்குடியிருப்பு - EP
மட்டக்களப்பு.



"இன்பம் பனித்துளியைப் போன்றது. அது சிரிக்கும் போதே உலர்ந்து போய்விடும்."

## விஷ்வப்பிரம்மா பொன் அகம்




ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து
கொடுப்பதுடன் பழைய தங்கம் வெள்ளி
நியாயமான விலையில் வாங்கப்படும்.

உரிமையாளர் - மூர்த்தி
தட்டார் தெரு
தாழங்குடா - 03
தொ.பே - 0776529929

## MLS
Screen Print





**விரைவான சேவை**
**தரமான வேலை**

புதுக்குடியிருப்பு, மட்டக்களப்பு.
தொ.பே : 077 362 0328 / 065 365 0153

## ருபேஷன் மோட்டர்ஸ்

அனைத்து வகையான மோட்டார் சைக்கிள்களுக்குமான Mechanical
Service & Repairing Body Washing, Painting
என்பன மிகச் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

**இங்கு அனைத்து மோட்டார் சைக்கிள்களும் அவற்றுக்கான**
**உதிரிப்பாகங்களும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள முடியும்.**



கண்ணகை அம்மன் கோயில் வீதி
தாழங்குடா – 02
தொ.பே: 0652247800 / 0776648006



தரமான பொருட்கள் மலிவான விலையில்....

# மொடன் ஃ பேர்னிச்சர்

# Modern Furniture

அலுமாரி, சோபாசெற், கட்டில், மெத்தைகள், பிளாஸ்ரிக், கதிரைகள், கணனி மேசைகள், மாணவர் மேசைகள், வோசிங் மெசின், ரைஸ்குக்கர், தையல் இயந்திரம், அவண், LCD TV, DVD பிளையர், தண்ணீர் மோட்டர், மின்விசிறி, TVஸ்ராண்ட், கோம்தியட்டர் சிஸ்டம் இன்னும் பல 125க்கு மேற்பட்ட பொருட்கள் எம்மிடம் உண்டு.



உங்கள் இல்லங்களையும் அலுவலகங்களையும் அழகுபடுத்தும் நவீன தளபாடங்கள், நவநாகரிக உபகரணங்களை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

பிரதான வீதி, புதுக்குடியிருப்பு - 04

தொ.பே.இல: 075 555 2468 / 075 236 0543

கதிரவன் சஞ்சிகைக்கு தகுதியான ஆக்கங்கள் மற்றும் விளம்பரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

0754265201 0654903006

வணசிங்கா பிரிண்டர்ஸ் 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே: 0652227170

கதிரவன் கலைக்கழகம்
புதுக்குடியிருப்பு-30158
மட்டக்களப்பு,

கதிரவன்
கல்வி இலக்கிய கலைச் சஞ்சிகை

அன்புடையர்,

முத்திங்கள் இதழாக வெளிவந்த கதிரவன் 2012 ஆம் ஆண்டு முதல் இரண்டு மாதத்திற்கு ஓர் இதழாக வெளிவர இருக்கின்றது. எனவே கதிரவன் வளர்ச்சிக்கு சந்தாதாரராகி உதவுங்கள். இவ் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்து அனுப்பவும்

## சந்தா விண்ணப்பப்படிவம்- ஓராண்டு

முழுப்பெயர் :..........................................................

நிரந்தர முகவரி :..........................................................

..........................................................

..........................................................

சஞ்சிகை அனுப்பவேண்டிய முகவரி :..........................................................

..........................................................

..........................................................

தொலைபேசி இலக்கம் :..........................................................

இத்துடன் ரூ.400 ற்கான தொகையை, காசோலை/காசுக்கட்டளை இல.................... இணைத்துள்ளேன்.

திகதி :............................. கையொப்பம் :.............................

வங்கி கணக்கு இல: 8725117 - கதிரவன் கலைக் கழகம் (இலங்கை வங்கி , காத்தான்குடி)

காசுக்கட்டளை த.இன்பராசா எனப்பெயரிடுக

அனுப்பவேண்டிய தபாலகம்: புதுக்குடியிருப்பு - கீ.மா

அனுப்ப வேண்டிய முகவரி : த.இன்பராசா,
புதுக்குடியிருப்பு-30158
மட்டக்களப்பு.

தொலைபேசி இலக்கம் : 075 4265201, 065 490 3006